ஸ்ரீ:॥

ஸ்ரீமதே நாராயணாய நமஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹாகுரவே நமஃ ॥

ஸ்ரீ வைகானஸம்

மாத பத்திரிகை

ஸ்ரீ விகலே முனீந்த்ரஃ

மாலை:2 ஸ்ரீ விக்ரம வருஷம் ஆவணி மாதம் மலர்: 7

Vol.2 No.7 Aug 2000

வருட சந்தா ரூ.60.00 தனி இதழ் விலை ரூ. 5.00

இந்த மாதம் சந்தா முடிவடையும் நபர்களின் விபரம் :

1. A.K.S. 5377 ஸ்ரீ N.R. வாசுதேவ பட்டாச்சார், திருவல்லிக்கேணி - 600 005
2. A.K.S. 5439 ஸ்ரீ V. சௌந்தராஜ பட்டாச்சார், மேற்கு மாம்பலம் - 600 033.
3. A.K.S. 5375 ஸ்ரீ V. பரகால பட்டாச்சார், புரசைவாக்கம் - 600 084.
4. A.K.S. 5368 ஸ்ரீ V. கண்ண பட்டாச்சார், ஆதம்பாக்கம் - 600 088.
5. A.K.S. 5390 ஸ்ரீ S. கல்யாணராம பட்டாச்சார், விருகம்பாக்கம் - 600 092.
6. A.K.S. 5376 ஸ்ரீ L. ரங்கநாத பட்டாச்சார், கம்பர் நகர் - 600 099.
7. A.K.S. 5381 ஸ்ரீ S. பார்த்தசாரதி பட்டாச்சார், கோயம்பேடு - 600 107.
8. A.K.S. 5372 ஸ்ரீ K. வேணுகோபால பட்டாச்சார், ஈக்காடு - 602 021.
9. A.K.S. 5386 ஸ்ரீ S. ஸ்ரீதர பட்டாச்சார், சதுரங்கப்பட்டினம் - 603 102.
10. A.K.S. 5382 ஸ்ரீ M.S. ரங்கராஜ பட்டாச்சார், மாமல்லபுரம் - 603 104.
11. A.K.S. 5379 ஸ்ரீ R. மதுசூதன பட்டாச்சார், சத்தியமங்கலம் - 603 305.
12. A.K.S. 5384 ஸ்ரீ V. சந்தான பட்டாச்சார், திருவக்கரை - 604 304.
13. A.K.S. 5380 ஸ்ரீ S. முரளி பட்டாச்சார், எஸ்.வி.டி. நகர் - 605 602.
14. A.K.S. 5393 ஸ்ரீ M. சேஷாத்ரி பட்டாச்சார், பில்லூர் - 606 751.
15. A.K.S. 5398 ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார், புதுபாளையம் - 607 001.
16. A.K.S. 5391 ஸ்ரீ S. புருஷோத்தம பட்டாச்சார், கல்லிடைகுறிச்சி - 607 203.
17. A.K.S. 5395 ஸ்ரீ P.K. ராமசாமி பட்டாச்சார், திருகண்ணமங்கை - 610 104.
18. A.K.S. 5371 ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார், மேலதந்நிலம்பாடி - 611 109.
19. A.K.S. 5396 ஸ்ரீ D. ஸ்ரீதர பட்டாச்சார், கோவில்பத்து - 611 112.
20. A.K.S. 5374 ஸ்ரீ P. பாலகிருஷ்ண பட்டாச்சார், R.K.R.Lane - 613 009.
21. A.K.S. 5369 ஸ்ரீ D. சௌந்தரராஜ பட்டாச்சார், தென்னூர் - 620 017.
22. A.K.S. 5397 ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸ மூர்த்தி, கரூர் வைஸ்யா பேங்க் - 626 001.
23. A.K.S. 5389 ஸ்ரீ V. சுந்தரராஜ பட்டாச்சார், கல்லிடைகுறிச்சி - 627 416.
24. A.K.S. 5394 ஸ்ரீ V. ரகுராம பட்டாச்சார், அரியகுடி - 630 202.
25. A.K.S. 5383 ஸ்ரீ S. பட்டாபிராம பட்டாச்சார், கொசப்பேட்டை - 632 001.
26. A.K.S. 5441 ஸ்ரீ A.K. ராகவ பட்டாச்சார், ஆற்காடு - 632 503.
27. A.K.S. 5392 ஸ்ரீ D. சக்கரவர்த்தி பட்டாச்சார், சக்ரமல்லூர் - 632 511.
28. A.K.S. 5385 ஸ்ரீ V. ஸ்ரீராம பட்டாச்சார், பாண்டமங்கலம் - 637 208.
29. A.K.S. 5387 ஸ்ரீ R. சௌந்தரராஜ பட்டாச்சார், சேகரிபுரம் - 678 010.

மேற்கண்ட வாசக ஸ்வாமிகள் சந்தாவை உடனடியாக புதுபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹா குரவே நமஃ ॥



ஸ்ரீ வைகானஸம்

மங்களாஶாஸநம்

ஸ்ரீவைகாநஸ ஸந்தேஶஃ விகநா கருணோத்திதா ।
ஸ்ரீநிவாஸ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ।
ஸ்ரீவைகாநஸ ஸந்தேஶஃ ஸ்ரீஶஸ்ய ப்ரியயா ஸஹ ।
வைகாநஸாநாம் ஸர்வேஷாம் கேஹே கேஹே
ஸதா வஸேத் ॥

ஸ்ரீமத் விகநஸாசார்யருடைய கருணையினால் உண்டாகி யிருக்கும் இந்த ஸ்ரீவைகாநஸ பத்திரிகை ஸ்ரீநிவாஸனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தினாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது. ஸ்ரீவைகாநஸர்கள் அனைவருடைய க்ருஹங்கள்தோறும் இந்த ''ஸ்ரீவைகாநஸம்'' பத்திரிகை ஸ்ரீமந் நாராயணனுடைய ப்ரியையான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக் கடவது.

ஆசிரியர்
N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார் D.E.E.,

இணை ஆசிரியர்
D. மோகன் பட்டாச்சாரியார், M.A.,

வெளியிடுவோர்:
AKS டிரஸ்ட்
11/24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
Ph: 044-4710036 Email : MOHAND@eth.net

மாலை: 2 ஸ்ரீ விக்ரம வருஷம் ஆவணி மாதம் மலர்: 7

ஸ்ரீஃ

விஷய ஸூசிகை

ஆசிரியர் உரை 5

பஞ்சாங்க ஸங்க்ரஹம், தர்ப்பண ஸங்கல்பம் 6

திவ்ய தேசங்கள் 7

யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டா 9

ஸ்ரீ ஜெயந்தி 10

ஸ்ரீ புருஷஸூக்த வ்யாக்யானம் 11

ஸ்ரீ விகநஸ ஸ்தோத்ர பாட: 14

உத்ஸவாதி விவரங்கள் 18

அம்மாமிக்கு அன்புடன் 19

மருத்துவக்கட்டுரை 21

மணிஓசை 22

மணமாலை 23

இந்த மாத ப்ரபலம் 26

வடமொழி அகராதி 27

தையற்கலை 29

த்வாதஶ மாஸார்ச்சனம் 34

இப்பத்திரிகைக்கு வரும் வாசகர் கடிதங்கள், கட்டுரைகள், கருத்துக்களை தொகுக்கவோ, சுருக்கவோ, ஒதுக்கவோ ஆசிரியர் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

இப்பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைகள், மற்றும் வாசகர் கேள்விக்கான பதில்கள் வித்வான்கள் மற்றும் எழுத்தாளர்களின் சொந்தக்கருத்தாகும். இவற்றால் உண்டாகும் விளைவுகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ஆசிரியர் குழு பொறுப்பேற்காது.

மணமாலை பகுதியில் வெளியாகும் வதூ/வரன் குறித்த செய்திகள் பத்திரிகைக்கு கடிதம் மூலம் பெற்றவையே- வதூ/வரன்களைப் பற்றி தீர விசாரித்துச் செயல்படவும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ''ஸ்ரீவைகானஸம்'' பத்திரிகை பொறுப்பேற்காது.

உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?
உடனே புதுப்பிக்கவும்.

ஆசிரியர் உரை

ஸ்வாமிகள் ஸன்னிதியில் விஜ்ஞாபனம்.

எப்பொழுதும் போல் சீரும் சிறப்புமாக அதிவிமரிசையாக தெற்கில் உப்பிலியப்பன் கோவில் முதல் வடக்கே நைமிசாரண்யம் வரை பல முக்யதிவ்யதேசங்களில் ஜகதாசாரியரான ஸ்ரீவிகநஸ மாமுனிவன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நடைபெற்று வருகிறது. சென்னையில், கோயம்பேட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ விகநஸாசாரியர் திருநக்ஷத்ர வைபவம், மான்வாஹன சேவை, சாற்றுமறை வரும் 14.8.2000 அன்று ஸாயம் நடைபெறவுள்ளபடியால், ஸ்ரீவைகானஸாள் அனைவரும் ஸஹ குடும்ப ஸமேதராக எழுந்தருளி ஆசாரியன் உத்ஸவத்தை நடத்தித்தர வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம். சென்ற மாதத்திய ஸ்ராவணோபாகர்மா செயல்முறை விளக்கத்தில் கணிப்பொறியில் ஏற்பட்ட சிறு தவறு காரணமாக விடுபட்ட சில வரிகள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன. ஸ்வாமிகள் இவற்றை கவனித்து உபாகர்மாவில் சேர்த்துக் கொண்டு அனுஷ்டிக்க வேணும். இப்படிக்கு

ஆசிரியர் குழு

ஸ்ரீ வைகானஸ ஞான வேள்வி

ஆஹுதி 26

சிதம்பரத்தில் கீழ ஸன்னிதி வீதி R.R. கல்யாண மண்டபத்தில் 27.8.2000 அன்று முழுநாள் விழாவக, ஸ்ராத்தப்ரயோக நூல் வெளியீடு, ''ஸந்தியாவந்தனம்'' கேஸட் வெளியீடு, கருத்தரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றுடன் விமரிசையாக பல வித்வான்களும் குலஸ்வாமிகளும் குடும்பத்துடன் கலந்து கொள்ளும் ஸ்ரீ வைகாநஸ மாநாடு நடத்த ஏற்பாடாகியுள்ளது. அனைத்து ஸ்ரீவைகாநஸர்களும் குடும்ப ஸமேதராக எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

செய்தி

சென்ற 27.4.2000 அன்று D.D. பொதிகை டிவியில் மாலை 7 மணி முதல் 7.30 வரை ஒளிபரப்பப்பட்ட ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீராமநவமி விழாவில் அக்கோவில் முறை அர்ச்சகர் ஸ்ரீ உ.வே. S. கோவிந்த பட்டாச்சார் அக்கோயிலைப் பற்றி அருமையாக உபன்யஸித்தார்.

ஸ்ரத்தாஞ்ஜலி

சென்ற ஆனி மாதம் 26 ஆம் தேதி (10.7.2000) அன்று சோளிங்கபுரம் ஸ்ரீநிவாஸ பட்டாச்சார் ஆசார்யன் திருவடியடைந்தார். அவரது குடும்பத்தினருக்கு வாசக ஸ்வாமிகள் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
ஸ்ரீவைகாநஸம், A.K.S. Trust.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கலியுகாதி 5102 விக்ரம, தக்ஷிணாயனம், வர்ஷருது, ஆவணி மாதம்

Aug 2000	ஆவணி	கிழமை	முக்கிய அம்சம்
22	6	செவ்	ஸ்ரீவைகானஸ ஸ்ரீஜயந்தி
23	7	புத	செங்கல்பட்டு Dt. ஆத்தூர் ஸ்ரீவிகன ஸாச்சாரியன் சாத்துமறை
25	9	வெள்	ஸர்வ ஏகாதசி
29	13	செவ்	ஸர்வ அமாவாசை
செப்			
1	16	வெள்	விநாயகர் சதுர்த்தி
6	21	புத	அதிதி
9	24	சனி	ஸர்வ ஏகாதசி
10	25	ஞாயி	ஸ்ரவண விரதம்
13	28	புத	பௌர்ணமி
14	29	வியா	மஹாளய பக்ஷ ஆரம்பம்
16	31	சனி	சூன்ய திதி, புரட்டாசி மாசப்பிறப்பு (17.9.2000) 1.48 a.m. IST

தர்ப்பண ஸங்கல்பம்

கலியுகாதி 5102 ஆவணி மாதம் 1 ஆம் தேதி (17.8.2000) மாசப் பிறப்பு

ப்ரபாவதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீவிக்ரம நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷருதௌ ஸிம்ஹமாஸே க்ருஷ்ணபக்ஷே த்விதீயாயாம் ஶுபதிதௌ குரு வாஸரயுக்தாயாம் பூர்வ ப்ரோஷ்ட பதா நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் த்விதீயாயாம் புண்யதிதௌ ஸம்ஹரவி ஸிங்க்ரமண காலே காவேரீ மத்யே ஸிம்ஹரவி ஸங்க்ரமண ஶ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

ஆவணி மாதம் 13 ஆம் தேதி (29.8.2000) அமாவாஸ்யை

ப்ரபாவதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீ விக்ரம நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷருதௌ ஸிம்ஹமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் ஶுபதிதௌ பௌமவாஸர யுக்தாயாம் மகநக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ தர்ஶபுண்ய காலே காவேரீமத்யே தர்ஶஶ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே॥

இரண்டு வகை மனிதர்கள் வாழும்போதே தேவர்களாகிறார்கள்:-

1. தண்டிக்கும் சக்தி தனக்கிருந்தும் தமக்கு தீமை செய்பவர்களை மன்னித்தல்.

2. தான் ஏழையாக இருந்தாலும், தேவைப்படுபவர்களுக்கு தன்னால் இயன்ற தானம் கொடுப்பார்கள்.

இளமையில் தவறான பலவற்றை நம்புகிறோம். முதுமையில் உண்மையான பலவற்றை சந்தேகிக்கிறோம்.

திவ்ய தேசங்கள் - 7

D. மோகன் பட்டாச்சார், M.A., இணை ஆசிரியர் ஸ்ரீ வைகானஸம்

நமது வாசககுல ஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த இதழ் முதல் நமது ஸ்ரீவைகானஸ பகவத் ஸாஸ்த்ரப்படி ஆராதிக்கப்படும் திவ்ய தேசங்கள் மட்டும் எழுத உத்தேசித்துள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கரம்பனூர்

(உத்தமர்கோவில், பிக்ஷாண்டார் கோவில், கதம்ப க்ஷேத்ரம்)

இந்த ஸ்தலத்திற்கு திருச்சியிலிருந்து திருவெள்ளரை போகும் பஸ்ஸில் செல்லலாம். ஸ்ரீரங்கத்தில் இருந்து சுமார் 1 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ரயில் நிலையமும் உள்ளது. திருச்சியில் தங்கி இங்கு ஸேவித்துவிட்டு திரும்பலாம். இது சோழநாட்டுத் திருப்பதியைச் சேர்ந்த ஸ்தலம்.

ஸ்தல புராணம்

ப்ரம்மனின் பக்தியைச் சோதிக்க விரும்பிய பெருமாள் இந்த ஸ்தலத்தில் ஒரு கதம்ப மரமாக உருக்கொண்டு நின்றார். இதை அறிந்த ப்ரம்மா இங்கு வந்து கதம்ப மரத்தை ஆராதிக்க பெருமாள் ப்ரம்மனுக்கு காட்சியளித்து இதேபோல்க தினமும் தன்னை ஆராதிக்கும்படி கட்டளையிட்டதால் ப்ரம்மாவும் இங்கு கோவில் கொண்டார். தனது கமண்டல நீரால் பிரம்மா கதம்ப மரத்தை திருமஞ்சனம் செய்ய அதுவே குளமாக தேங்கிவிட்டது.

தன்னைப் போலவே ப்ரம்மாவுக்கும் 5 தலைகள் உள்ளதைப் பொறுக்காமல் சிவன் ப்ரம்மாவுடைய ஒரு தலையை கிள்ளி எறிந்தபடியால் ப்ரஹ்மஹத்தி தோஷம் நேர்ந்து சிவனுடைய கையில் ப்ரம்மாவின் கபாலம் ஒட்டிக் கொண்டது. அதனால் இத்தோஷம் தீர்வதற்கு இங்கு வந்து சிவன் பெருமாளை துதிக்க, பெருமாள் மஹாலக்ஷ்மியிடம் சிவனின் பிக்ஷாபாத்திரத்தில் பிக்ஷையிடுமாறு கூற மஹாலக்ஷ்மியும் அவ்வாறே செய்ய பிக்ஷாபாத்திரம் நிரம்பி சிவனுடைய கையில் இருந்த கபாலம் விடுபட்டது. இதனால் சிவன் பிக்ஷாடனமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார்.

'புருஷேஷு விஷ்ணுஃ' என்றபடி புருஷரில் உத்தமனாக புருஷோத்தமனாகவும், உத்தமனாகவும் விளங்கும் எம்பெருமான் 'புருஷோத்தமன்' எனும் திருநாமத்துடன் உறையும் இந்த உத்தமர்கோயில் திருக்கோயிலின் பெருமை அளவிட முடியாதது. இவனை ஸேவித்து ப்ரார்த்தித்தால் ஸர்வாபீஷ்டங்களும் ஸித்திக்கும் என்பதில் ஐயமில்லை. கட்டுரை பெரிதாகிவிடும் என்ற எண்ணத்தில் உலகளந்த நம் உத்தமன் பற்றிய கட்டுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறோம்.

மூலவர் : புருஷோத்தமன், புஜங்கசயனம், கிழக்கே திருமுகமண்டலம்.

தாயார் : பூர்ணவல்லி, பூர்வாதேவி

விமானம் : உத்யோக விமானம்

தீர்த்தம் : கதம்ப தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ப்ரம்மா, சிவன், உபரிசரவசு, ஸநக ஸநாதன ஸநந்தன ஸநத் குமாரர்கள், கதம்ப முனிவர்.

ஆராதனம் : ஸ்ரீவைகானஸ பகவத் ஶாஸ்த்ரம்

மங்களாசாஸனம் : திருமங்கையாழ்வார் - 1 பாசுரம்.

-சுபம்- தொடரும்

ஶ்ராவண உபாகர்மா - விடுபட்ட விஷயம்

சென்ற ஜூலை 2000 இதழில் வெளியான ''உபாகர்மா'' மந்த்ர பாடத்தில் 14 வது பக்கத்தில் காண்டரிஷி தர்ப்பணத்தில் முக்யமான 8 வரிகள் கணிப்பொறியில் நேர்ந்த தவறு காரணமாக விடுபட்டுவிட்டன. அவை இங்கு கொடுக்கப்படுகின்றன. ஸ்வாமிகள் அனைவரும் க்ஷமித்தருளி, இவ்விஷயத்தைக் கவனித்து, காண்டரிஷி தர்ப்பணத்தை மேற்கொள்ளுமாறு ப்ரார்த்திக்கிறோம். 14 வது பக்கத்தில் 23 வது வரிக்குப் பிறகு, (அதாவது, ''ஸோமம்.... கிடையாது'' என்பதற்கு பிறகு) கீழ்க்கண்ட 8 மந்த்ரங்களைக் கூறி ரிஷி தீர்த்தமாக தர்ப்பிக்க வேணுமர். ஏற்கனவே கூறியபடி, ஸோமம்.... முதல் அருணம்... ஸதஸஸ்பதிம்... வரை ப்ரஹ்மசாரிகளுக்கு கிடையாது; மற்றவை அனைத்தும் உண்டு. க்ருஹஸ்தர்கள் முழுக்கவும் சொல்லி தர்ப்பிக்க வேண்டியது.

காண்டரிஷி தர்ப்பணம்

ஸவிதாரம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
ப்ரஜாபதிம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
ஸோமம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
அக்னிம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
விஶ்வான் தேவான் காண்டரிஷீன் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
ப்ரஹ்மாணம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
ஶுக்ரியம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।
அருணம் காண்டரிஷிம் தர்ப்பயாமி । ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி ।

சென்ற இதழின் 7 வது பக்கத்தில் காமோகார்ஷீத் ஜபத்திற்குக் கீழ் கொடுக்கப்பட்ட ஆசமனத்தில், கட்டைவிரல், ஆள்காட்டி விரல் இவற்றால் வலது, இடது மூக்கு த்வாரங்களைத் தொடவும்: என்ற க்ரியைக்கு வாயுஃ ப்ரீணாது; வாயுஃ ப்ரீணாது என்று சொல்லித் தொடவும்.

அதன்பின், கட்டைவிரல், சுண்டுவிரல் இவற்றால் வலது, இடது தோள்களைத் தொடவும்: தொடுவதற்கான மந்த்ரம்: இந்த்ரஃ ப்ரீணாது என்பது அங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு ஆசமனத்தில் திருத்தி வாசித்துக் கொள்ளும் படியாக வாசக ஸ்வாமிகளை அன்புடன் ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.

ஶ்ரமத்திற்கு க்ஷமிக்கவேணும்.

இப்படிக்கு
ஆசிரியர்,

யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டா

கோனேரிராஜபுரம் ஸ்ரீ ஸ்ரீரங்க பட்டாச்சாரியரின் திருக்குமாரரான ஸ்ரீ வாஸுதேவ பட்டாச்சாரிய ஸ்வாமியால் எழுதியருளப் பெற்ற ஸ்ரீ ஆஹ்நிகாம்ருதத்தில் உள்ள யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டை கீழே கொடுக்கப் படுகிறது:

யக்ஞோபவீதத்தை அணிவதற்கு முன்னால் பருத்தி நூலால் செய்த புதிய யக்ஞோப வீதத்தை ப்ரதிஷ்டை செய்து பிறகுதான் அணிய வேண்டும்.

ஸ்நானம் செய்து உலர்ந்த வஸ்திரம் அணிந்து ஊர்த்வபுண்ட்ரம் தரித்துக் கொண்டு கிழக்கு முகமாய் அமர்ந்து, ஆசமனம் செய்து, பவித்ரம் தரித்துக்கொண்டு, பிராணாயாமம் செய்து தேசகால திதிவார, நக்ஷத்ரங்களைச் சொல்லி ஸ்ரீ பகவதாக்ஞயா, ஸ்ரீ பகவத் கைங்கர்ய ரூபம், ஸ்ரீ மந்நாராயண ப்ரீத்யர்த்தம் யக்ஞோபவீத ப்ரதிஷ்டாம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்துகொள்ள வேண்டும்.

மாவிலையுடன் கூடிய தீர்த்த கும்பத்தின் மேல் உபவீதத்தை சாத்தி வைக்கவும்.

ஓம் யம் நமஃ - ஓம் ரம் நமஃ - ஓம் வம் நமஃ

என்று சொல்லி சோஷண தாஹண ப்லாவனம் செய்யவும். (பாபங் களை உலர்த்தி, எரித்து - மீண்டும் புண்யம் தளிர்க்கச் செய்தல்)

உபவீதத்தை வலது கையினால் தொட்டுக்கொண்டு,

ஓங்கார ப்ரதமஸ்தந்து த்வி தீயோக்னி ஸ்ததைவச த்ருதீயோ 'பக'தை வத்யஃ சதுர்த்தஸ் ''ஸோம'' தைவதஃ பஞ்சமஃ 'பித்ரு' தைவத்யஃ ஷஷ்டஸ் சைவ ப்ரஜாபதிஃ ஸப்தமோ வஸு தைவத்யஃ தர்மஸ்சாஷ்டம தேவதா நவம ஸ்ஸர்வ தைவத்ய ஃ இத்யே தேநவ தேவதாஃ

என்று ஒன்பது தேவதைகளையும் தியானிக்கவும்.

கீழ்க்கண்ட ப்ராணப்ரதிஷ்டா மந்த்ரத்தை பன்னிரெண்டு முறை ஜபிக்கவும்.

ஓம் அஸுநீதேபுனரஸ்மாஸு சக்ஷுஃ புநஃ ப்ராணமிஹநே தேஹி போகம் ஜ்யோக்பச்யேம ஸூர்யமுச்சரந் தமநுமதே ம்ருடயான ஸ்வஸ்தி அம்ருதம் வைப்ராணா அம்ருதம் ஆபஃ ப்ராணாநேவ யதாஸ்தானம் உபஹ்வயதே

பிறகு, ஓம்இதம் விஷ்ணுர்விசக்ரமே த்ரேதா நிததேபதம் ஸமூடமஸ்ய பாகும் ஸுரே

என்று சொல்லி, ஸ்ரீபூமி ஸஹிதம் ஸ்ரீவிஷ்ணும் ஆவாஹயாமி

என்று ஸ்ரீ, பூமி ஸஹிதரான விஷ்ணுவை யக்ஞோபவீதத்தில் ஆவாஹனம் செய்யவும்.

ஸ்ரீ, பூஸஹிதவிஷ்ணவே நமஃ பாத்யம் ஸமர்ப்பயாமி, அர்க்யம் ஸமர்ப்பயாமி, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி, கந்தம் ஸமர்ப்பயாமி, புஷ்பம் ஸமர்ப்பயாமி, தூபம் ஸமர்ப்பயாமி, தீபம் ஸமர்ப்பயாமி, கதலிபலம் நிவேதயாயி, ஸமர்ப் பயாமி என்று அர்ச்சிக்கவும்.

உபவீதத்தை வலது கையினால் தொட்டு கீழ்கண்டமந்த்ரம் சொல்லி அபிமந்த்ரிக்கவும். ஓம் விஷ்ணோர்நுகம் வீர்யாணிப்ரவோசம் யஃ பார்த்திவானி விமமேரஜாகும்ஸி யோ அஸ்கபாய துத்தரகும் ஸதஸ்தம்

விசக்ரமாண ஸ்த்ரேதோருகாயோ விஷ்ணோரராடமஸி விஷ்ணோஃ ருஷ்டமஸி விஷ்ணோஸ்ஸ்ஞுப்த்ரேஸ்தோ விஷ்ணோஸ்ஸ்யூரஸி விஷ்ணோர் த்ருவமஸி வைஷ்ணவமஸி விஷ்ணவேத்வா

இப்படி அபிமந்திரித்த பூணூலை க்ருஹாராதனப் பெருமாளுக்கு

ஓம் அக்னிம் தூதம் வ்ருணீமஹே ஹோதாரம் விச்வவேதஸம் அஸ்ய யக்ஞஸ்ய ஸுக்ரதும்

என்று மந்த்ரம் சொல்லி அணிவித்து பிறகு பகவத் ப்ரஸாதமான அந்த பூணலை பெருமாளிடமிருந்து களைந்து கீழ்ச் சொல்லியபடி அணிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டை சொல்லப்பட்டது. யஜ்ஞோப வீத தாரண க்ரமம் சென்ற இதழில் வெளியான ஸ்ராவணோ பாகர்மாவில் பார்த்துக் கொள்ளலாம்.

ஸ்ரீ ஜெயந்தி

அஷ்டமியன்று ஸாயம் அங்குரார்ப்பணம் செய்து, ராத்ரி திருவாராதனை முடிவிலே ஸ்ரீக்ருஷ்ணனை அலங்கரித்து ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, சுற்றிலும் வாழைமர, பாக்குமர, மாவிலைத் தோரணங்கள் அமைக்க வேண்டும். நாட்டியம், கச்சேரி, வாத்யங்களைக் கொண்டு விழா நடத்தி, ஸ்தோத்ரங்களும், ஜயஜயத்வனிகளும் பக்தர் களைக் கொண்டு செய்வித்து வஸ்த்ரம், மாலைகள் களைந்து, ஈரவாடை சாற்றி, பாத்யாதி உபசாரங்கள் செய்ய வேண்டும். பெருமானுக்கு தைலாப்யஞ்ஜனம் (எண்ணை சாற்றுதல்) செய்து விஸேஷத் திருமஞ்சனம் செய்து பிறகு பெருமாளை அலங்கரிக்க வேண்டும். பசும்பாலும், வெண்ணையும் 'ஸுந்நோதேவீ' மந்த்ரத்தால் நிவேதனம் செய்து தாம்பூலமும் நிவேதனம் செய்து புஷ்பாஞ்சலி ஸமர்ப்பிக்க வேண்டியது.

பெருமாளுக்கு ரக்ஷாபந்தனம் செய்து, ஸயநாதிவாஸம் பஞ்சஸயனங்கள் அல்லது ஐந்து வஸ்த்ரங்களாவது சேர்த்து, பெருமாள் ஸயனிக்க வேண்டும்.

மறுநாள் காலை, எம்பருமானை ப்ரணவம் கூறி எழுப்பி பாத்யாசமன புஷ்பகந்த தூபதீபார்க்யாசமனாதி அஷ்ட உபசாரங்கள் செய்து அலங்கரிக்க வேண்டியது.

ஆலயம், அல்லது க்ராமத்தைச் சுற்றி ஸ்ரீக்ருஷ்ணன் ப்ரதக்ஷிணமாக உத்ஸவம் கண்டருள வேண்டும். உத்ஸவத்தை சேவிக்கின்ற ப்ராஹ்மணர் களின் தலையில் அர்ச்சகர்கள் மஞ்சள்பொடியும் தைலமும் தெளிக்க வேண்டியது. மீண்டும் ஆலயத்தில் ஆஸ்தான மண்டபத்தில் ஸ்ரீக்ருஷ்ணனை எழுந்தருளச்செய்து திருமஞ்ஜனம் செய்யவேண்டியது. 'மஹாஹவி' என்று சொல்லப்பட்டபடி நிரம்ப தளிகைகள் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு திருக்கண்டருளப் பண்ணி அலங்கரித்து ஆலய ப்ரதக்ஷிணமாக கர்ப்பகிரகத்தில் பெருமாளை எழுந்தருளப் பண்ணவேண்டியது. மேற்கூறியவாறு, ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ஸ்ரீஜயந்தியை கொண்டாட வேண்டியது. இவை ரிஷி வாக்காகும்.

''தத்ர சந்த்ரோதயே விஷ்ணும் க்ருஷ்ண விக்ரஹ மர்ச்சயேத்'' என்ற ஸ்ரீக்ரியாதிகார வசனப்படி, எந்த பெருமாள் கோயிலாக இருந்தாலும், ஸ்ரீஜயந்திக்காவே தனியாக எழுந்தருளியிருக்கும் க்ருஷ்ண பகவான் விக்ரஹத்தை பூஜிக்க வேண்டியது. அப்படி, தனியாக இல்லாவிட்டால், ஆலயத்தின் ப்ரதான பெருமாளையே அர்ச்சிக்க வேண்டியது. ஸாயங் காலம், சந்த்ரோதயம் ஆனபிறகே, பெருமாளை ஸ்ரீஜயந்திக்காக பூஜிக்க வேண்டியது.

ஸ்ரீ புருஷ ஸூக்த வ்யாக்யானம்

N.S.பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர் ''ஸ்ரீவைகானஸம்''.

ஸ்ரீரங்கபட்ட கருணாம்ருத லப்த போதம்
ஸ்ரீவைகானஸாந்வய மஹாப்தி ஸுதாநிதிம் தம் ।
ஸ்ரீகோஷ்வாராதனே ஸதா நிஷண்ணம்
ஸந்தான பட்ட குருவர்யமஹம் ப்ரபத்யே ॥

உத்தரானுவாகம்

மந்த்ரம் - 6

ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ । அஹோராத்ரே பார்ஶ்வே । நக்ஷத்ராணி ரூபம் । அஶ்வினௌ வ்யாத்தம் । இஷ்டம் மநிஷாண । அமும் மநிஷாண । ஸர்வம் மநிஷாண ॥

அர்த்தம் : தேவரீருக்கு பூமிதேவியும் ஸ்ரீதேவியும் பத்னிகள்; அல்லும் பகலும் (உம்மை பிரியாமல்) பக்கத்திலிருக்கிறார்கள். உம் உருவம் நக்ஷத்ரங்கள் போய் ஒளியுள்ளதாய் இருக்கிறது. அஶ்விநீ தேவர்களுடையதுபோல் உம்முடைய திருமுகம் மிகவும் அழகியதாயுள்ளது. இஷ்டத்தைத் தரவேணும். இந்த கைங்கர்யத்தைத் தரவேணும். அனைத்தையும் தரவேணும்.

வ்யாக்யா : ''நமஃ'' என்று சொல்லி கைங்கர்யம் செய்வது பற்றி முன் இரண்டு மந்த்ரங்களில் சொல்லப்பட்டது. இந்த மஹோன்னதமான கைங்கர்யமானது எம்பெருமானும், பிராட்டிகளுமான சேர்த்தியிலேதான் செய்யப்பட வேண்டும் என்பதை இம்மந்த்ரம் எடுத்துரைக்கிறது.

புருஷஸூக்தத்திலே எம்பெருமானைப் புகழ்ந்து பாடிய அனைத்து மந்த்ரங்களுக்கும் தலையாயதாக அமைந்துள்ளது இம்மந்த்ரம். ஹ்ரீஶ்ச... மந்த்ரத்தில் முதல் 'ச'காரம் ஸ்ரீதேவி, பூதேவி இருவரையும் இணைத்துச் சொல்லுகிறது. இரண்டாவது 'ச'காரம் (லக்ஷ்மீஶ்ச) நீளாதேவியை குறிப்பதாகும்.

பக்தர்களுடைய குற்றங்களைப் பொறுக்குமாறு பகவானை வேண்டுபவள் ஸ்ரீதேவி என்றால், குற்றமாவது? பக்தர்களிடம் குறையொன்று மேயில்லை என்பாள் பூமிப்பிராட்டி. நாம் பூமித்தாய்க்கு செய்யும் அபராதங்களுக்கு ஓர் அளவில்லை. நாம் பூமிப்பிராட்டியை எவ்வளவோ துன்புறுத்தினாலும், நமக்கு ஜீவாதாரமான அன்னாதி ரஸங்களை கொடுப்பவள் பூமிப்பிராட்டி. கருணை மிக்கவள் மஹாலக்ஷ்மி என்றால் பொறுமை மிக்கவள் பூமியாவாள். க்ஷமயா ப்ருதிவீஸமஃ என்று ஸ்ரீராமன் பொறுமையில் பூமிக்கு நிகரானவன் என்று புகழப்பட்டான்.

பெரியபிராட்டியார் 'லக்ஷ்மீஃ' என்று இங்கு வழங்கப்படுகிறார். ப்ரஹ்மாதி தேவர்களாலே ப்ரார்த்திக்கப்படுபவளாகவும், மற்ற மஹிஷிகளுக்கெல்லாம் தலைவியாயுமிருப்பவள் மஹாலக்ஷ்மி. உலகிலுள்ள ஸர்வ ஐஶ்வர்யங்களையும் அளிப்பவள் ஸ்ரீதேவி. ஜீவர்களுக்கு புருஷாகாரமாயிருந்து செயல்படுபவளாவாள்.

இப்படிப்பட்ட மஹத்தான கீர்த்தியுடைய இந்த தேவிகள் எம்பெருமானுக்கு பத்னிகள். பதிம் நயதி - தன் கண்காட்டிய இடத்தில் பதியை காரியம் செய்யச் செய்பவள் பத்னீ.

''குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்'' (திருவிருத்தம் 33) என்று நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தி.

மனுஷ்யாள் யாவரும் விரும்பும் தனம், தான்யம், ஸௌக்யம் ஆகியவற்றை அளிப்பவர்கள் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளே. ஸ்ரீவிஷ்ணுவின் பத்தினிகளாக இவர்கள் உள்ளதாலே, உலகனைத்துக்கும் ஈஸ்வரிகள் எனக் குறிப்பிட்டு வேதத்தில் ஸ்ரீஸூக்தம், பூஸூக்தம், நீளாஸூக்தம் என 3 ஸூக்தங்கள் விஸேஷமாக கூறப்பட்டுள்ளன.

அஹோராத்ரே... என்று பகலுமிரவும் பரந்தாமன் பக்கத்தில் இப்பத்னிகள் அகலகில்லேன் இறையும் என்று இணைபிரியாமல் இருக்கிறார்கள். ''உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் என்றிவர் மூவர்'' என நம்மாழ்வாரும் (திருவாய். 1-9-4) அருளினார். இப்பத்னிகள் மூவரும் சேர்ந்துகொண்டு ஒருவருக்கொருவர், சேதனரிடம் அன்பு காட்டுவதில் போட்டியே போடுகிறார்கள். பெரியாழ்வாரும், ''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்கு மேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்'' என்று அருளினார்.

எம்பெருமானை விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும் ஸ்ரீமஃ, ஸ்ரீதஃ, பூகர்ப்பஃ, பூஃ, பூமயஃ, மஹீபர்த்தா முதலான திருநாமங்களால் துதிப்பதிலிருந்தே எம்பெருமானுக்கு இப்பத்னிகளாலுண்டான ஏற்றம் வெளிப்படுகிறது.

நக்ஷத்ராணி ரூபம் - ஸூர்யனைப் போன்ற தேஜஸ்ஸுள்ளவன் என்று சொல்லி த்ருப்தியடையாததாலே, கணக்கற்ற, நக்ஷத்ரங்களைப் போலே ஒளியுள்ளவன் என்கிறது வேதம். 'நக்ஷத்ரநேமிர் நக்ஷத்ரீ'' என எம்பெருமான் திருநாமங்கள். நம்மாழ்வார், ''நீள் சுடரிரண்டுமென்கோ? விளங்கு தாரகைகளென்கோ? (3-4 1,2) என்கிறார்.

திவ்யமான ஸங்க சக்ராதி ஆயுதங்களுடனும், திவ்யாபரணங்களுடனும், ஸ்ரீபூமிநீளா ஸமேதனாய், பீதாம்பராதி அலங்க்ருதமான திவ்ய மங்கள விக்ரஹத்துடனும் கூடிய பகவானுடைய ரூபம் கணக்கற்ற நக்ஷத்ரங்களுடன் கூடிய நீலமேகம்போல் விளங்குகிறது.

அஸ்விநௌ வ்யாத்தம் - அழகில் மிக்க உம்முடைய (பெருமாளுடைய) திருமுக மண்டலம் அஸ்வினீ தேவர்கள்போல் விளங்குகிறது. தேவருலகில் அஸ்வினீ தேவர்களே அழகு மிக்கவர்கள். பாண்டவரில் அஸ்வினீ தேவரம்ஸமான நகுலன் பாண்டவருள் அழகனாகத் திகழ்ந்தது நாமறிவோம். உபமானத்துக்காக இவர்களுடன் பகவானை ஒப்பிட்டதே யன்றி இவர்களும் பகவானுக்கு ஒப்பாகார். ஸ்மயமான முகாரவிந்த முடைய அரவிந்தலோசனனான (செந்தாமரைக் கண்ணன்) பகவானை இவ்வாறாகத் துதித்த வேத புருஷன், இப்புருஷ ஸூக்தத்தை அநுஸந்திப்பவர்களுக்கு இஹலோக புருஷார்த்தங்களையும், பகவத் கைங்கர்யத்தையும் கொடுக்கும்படி பரமபுருஷனை ப்ரார்த்திக்கிறான். எல்லா புருஷார்த்தத்தையும் கொடும் என்றால், ஸ்வயநலமா? என்றால் இல்லை. அநுஸந்தித்தவர்களுக்கு ஸர்வ ஸம்ருத்தியும் உண்டாக வேணும் என்பது பரார்த்தமல்லவோ. ஆழ்வார்களும், ''நன்மக்களைப்

பெற்று மகிழ்வரே'' என்றும். ''நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே'' ''நீங்காத செல்வம் நிறைந்து'' என்றும் அருளி யுள்ளனர். நம் ப்ருகு முதலான மஹர்ஷிகளும், இஹபர ஸுகம் இரண்டையுமளிக்கும் ஸ்ரீவைகானஸ பகவத் ஸாஸ்த்ரத்தை உலகுக்கு பரம கருணையுடன் அருளினார்கள். ஜகதாசார்யரான ஸ்ரீமத் விகனஸா சாரியரும், இறுதியில் ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சாரூபியாக புருஷஸூக்தத் தாலே ஆராதிப்பதாலே, எந்த யஜ்ஞமானாலும் ஐஹிக ஆமுஷ்மிக பலப்ரதமாக பலனளிக்கவல்லது என்றருளினாரன்றோ?

அமும் - அமும் என்றால் 'இதை'' எனப் பொருள். முன் மந்த்ரங்களில் 'நமஃ' என்று சொல்லி எம்பெருமான் பிராட்டியுமான சேர்த்தியிலே செய்யவேண்டிய கைங்கர்யத்தை 'அமும்' என்கிறான் வேதபுருஷன்.

ஸர்வம் - எல்லாவற்றையும் தரவேணும். வேண்டினவற்றெல்லாம் தருபவனல்லவா மாதவன்! எம்பெருமானை அர்ச்சாரூபியாக ஸ்ரீக்ருஷ்ணனாக ஸ்ரீஜயந்தியன்று ஆராதிக்கும் பக்தன் ஸர்வாபீஷ்டங் களும் அடைவதாக நம் மரீசி மஹர்ஷியும் ஸ்ரீவைகாநஸ ஸாஸ்த்ரத்தில் அருளினாரன்றோ! இவ்வாறாக, க்ருஹத்திலாவது, ஆலயத்திலாவது எம்பெருமானை ஆராதித்தும், ஆராதிக்க உபயம் செய்தும் ஸர்வாபீஷ்டங் களும் அடையலாம் என்றும் ஸ்ரீவைகாநஸ பகவத் ஸாஸ்த்ரம் போதித் துள்ளதை நினைவு கூர்கிறோம். ஸ்ரீவைகாநஸ ஸாஸ்த்ரத்தின்படி, க்ருஹாராதனமானாலும், ஆலயத்தில் ஆராதனமானாலும், மஹோத் ஸவங்களிலும், ப்ரதிஷ்டாதிகளிலும், இப்புருஷஸூக்தம் முதலான மந்த்ரங்களே முக்யமான அனுஸந்திக்கச் சொல்லப்பட்டுள்ளன என்பதை எண்ணும்போது புருஷஸூக்தத்தின் பெருமையும், ஸ்ரீவைகாநஸத்தின் பெருமையும் நமக்கு நன்கு விளங்குகிறது.

ஸர்வே ஜனாஸ்ஸுகினோ பவந்து

தொடரும்

ஸ்ரீ விகநஸாசாரியன் திருநக்ஷத்ர வைபவம்

சென்னை, கோயம்பேட்டில் எழுந்தருளி உள்ள நமது ஸ்ரீவிகநஸாச் சாரியருக்கு நாளது ஆகஸ்ட் மாதம் 14 ந் தேதி திங்கட் கிழமையன்று சாற்றுமறை உத்ஸவம் வெகு விமர்சையாக நடைபெற உள்ளது. அனைத்து குலஸ்வாமிகளும் வந்திருந்து உத்ஸவத்தை சிறப்பாக நடத்தித் தரும்படி ப்ரார்த்திக்கின்றோம்.

நிகழ்ச்சிநிரல்

மாலை 4 மணிக்கு விசேஷ அலங்கார திருமஞ்சனம்

மாலை 7 மணிக்கு ஸ்ரீவிகநஸாசாரியருக்கு மான் வாகனம், ஸ்ரீ வைகுண்ட வாஸப் பெருமாளுக்கு மங்களகிரி விமான புறப்பாடு.

இரவு 10 மணிக்கு சாற்றுமறையும் நடைபெறும்.

இப்படிக்கு
ஸ்ரீவைகாநஸ இளைஞர்கள் நற்பணி சங்கம்
சென்னை-33.

ஸ்ரீ:

ஸ்ரீ விகநஸ மஹா குரவே நம:

வரும் 14.8.2000 திங்கட்கிழமை நமது ஸ்ரீ விகநஸாச்சாரியரின் திருநக்ஷத்திர வைபவத்தை முன்னிட்டு அன்று அனைத்து குல ஸ்வாமிகளும் தம்தம் க்ருஹத்தில் / ஆலயத்தில் உள்ள ஸ்ரீ விகநஸாச் சாரியருக்கு விசேஷ திருவாராதனம் செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள ஸ்தோத்ர பாடத்தை அனுசந்திக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ விகநஸ ஸ்தோத்ர பாட:

ஸ்ரீ விகநஸ நாம ரத்நாவளி:

ஸ்ரௌதஸ்மார்த்தாதிகம் கர்ம நிகிலம் யேநஸேத்ரிதம்।
தஸ்மை ஸமஸ்தவேதார்த்த விதே விகநஸே நம:॥

ஸ்ருதி ஸ்ம்ருதி நதீபூர்ணம் ஸாஸ்த்ரகல்லோல ஸங்குலம்।
விஷ்ணு பக்த்யுதகம் ஸுத்தம் வந்தே ஸ்ரீ விகநோர்ணவம்॥

ஸ்ரீமத்யாதிம பூருஷே ருஷிகணாநேவம் ப்ருவாணே புதாந்
பூலோக ணுவதாரம்யஹந்து பவதாமேகோஸ்து மத்பூஜக:।

வ்யாஸே ஸ்வாஸபரே சுகே பகமதௌ போதாயநே தாவதி
ப்ராஹாஹம் விகநோ முனி: ப்ரதிதினம் ஸாஹஸ்ர மாகஸ்ஸஹே॥

நாராயணம் ஸகமலம் ஸகலாமரேந்த்ரம்
வைகாநஸம் மம குரும் நிகமா மேந்த்ரம்
ப்ருக்வத்ரி காஸ்யப மரீசிமுகாந் முனீந்த்ராந்
ஸர்வாநஹங்குலகுரூந் ப்ரணாமி மூர்த்நா॥

வஸந்தயாஜிப்ரமுகா: ப்ரஸித்தா: வைகாநஸா யே ச மஹாநுபாவா:
தேஷாமஹம்பாஷ்யக்ருதாம்குரூணாம்பாதாரவிந்தம்ப்ரணமாமிமூர்த்நா॥

யேஷாமாத்யம் வைஷ்ணவம் ஸ்ருஷ்டிராத்யா
ஸாகாப்யாத்யா ஸேத்ரமாத்யம் ஜகத்யாம் ।
தேஷாம் விப்ரஸ்ரேஷ்டவைகாநஸாநாம்
பாதாம்போஜம் பாவயாம்யந்தரங்கே॥

பக்தாங்க்ரிரேணு: ப்ரதமோ குரூணாம்
ததாதயோ யே விகநோ மதஸ்தா:
தேஷாம்குரூணாம் சரணாரவிந்த
தீர்த்தேந ஸிஞ்சாமி ஸிரோ மதீயம்॥

யத்ஸேத்ரம் ஸ்ருதிஸங்கதுக்த ஜலதேரப்யுத்த்ருதம் ப்ரஹ்மணா
லோகாநாமுபகாரகம் விகநஸா தத்தைத்திரீயாம்ருதம்।
ஸ்ரீமச்சராமணகாபிதா முனிவரைர் மந்வாதிபிர்வேதிதம்
விஷ்ணுப்ரீதிகரா விபாந்தி நிதராம் தே விப்ரநாராயணா:॥

விப்ரநாராயணாஸ்ஸந்தஸ்ஸமூர்த்தாத்வரகோவிதா:॥
வைகாநஸா ப்ரஹ்மவிதோ யோகஜ்ஞா வைஷ்ணவோத்தமா:॥

விஷ்ணுப்ரியா விஷ்ணுபாதா ஸ்ஸாந்தாஸ்ஸ்ராமணகாஸ்ரயா:।
பாரமாத்மிக மந்த்ரக்ஞா: ஸௌம்யாஸ் ஸௌம்ய மதாநுகா:॥

விஸுத்தா வைதிகாசாரா: ஆலயார்ச்சந பாகிந:।
த்ரயீ நிஷ்டாஸ்ச ஆத்ரேயா: காஸ்யபா பார்க்கவாஸ் ததா॥

மரீசி மதகா மாந்யா அநபாயிகணா: ப்ரியா:
ப்ருக்வாத்ருதா பக்தியுதாஃ பாபக்நா: புஷ்டிதாயிந:॥
இமாம் வைகாநஸாநாந்து நாமரத்னாவளிம் பரம்।
ய: படேதநிஶம் பக்த்யா ஸர்வபாபை: ப்ரமுச்யதே॥

ஆசார்ய ஸ்தோத்ர பாட:

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி ஆசார்யஸ்ய மஹாத்மந:।
வைகாநஸஸ்ய தேவர்ஷே: ஸ்தோத்ரபாடமிதம் பரம்॥
ய:படேச் ச்ருணுயாந்நித்யம் வைகாநஸ குலோத்பவ:॥
இஹலோகே ஸுகம் புங்க்த்வா ஸ யாதி பரமாங்கதிம்॥
ஓம் தேவராஜதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்॥
ப்ருக்வாதிமுனிபிர்மாந்யம் வந்தே ஸ்ரீவிகநோமுனிம்॥
ஸ்ரீலக்ஷ்மீவல்லபாரம்பாம் விகநோ முனிமத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்॥
வந்தே விகநஸம் ஸாக்ஷாத் த்யாத்ருமூர்த்திம் ருஷிம் பரம்।
ப்ருக்வாதி முனிஸ்ரஷ்டாரம் ஸஶத்ரரத்ந ப்ரவர்த்தகம்॥
நாராயண: பிதா யஸ்ய மாதா சாபி ஹரிப்ரியா।
ப்ருக்வாதிமுனய: புத்ராஸ் தஸ்மை விகநஸே நம:॥
அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்।
தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥
ஶ்ரௌதஸ்மார்த்தாதிகம் கர்ம நிகிலம் யேந ஸஶத்ரிதம்।
தஸ்மை ஸமஸ்த வேதார்த்தவிதே விகநஸே நம:॥
ஶ்ருதிஸ்ம்ருதிநதீ பூர்ணம் ஶாஸ்த்ரகல்லோல ஸங்குலம்।
விஷ்ணுபக்த்யுதகம் ஶுத்தம் வந்தே ஸ்ரீவிகநோர்ணவம்॥
நாராயணஸ்ய யஸ்யாத்மா விகநா இதி வர்த்ததே।
வேதவேதாங்கதத்வஜ்ஞம் தம் வந்தே விகநோ முனிம்॥
ஶ்ராவணே மாஸி ஸம்பூதம் ஶ்ரவணே சுக்லபக்ஷகே।
பத்மநாப மநோஜாதம் விஷ்ணுபூஜா விஶாரதம்॥
குஶாஸநே ஸமாஸீநம் ஊர்த்வபுண்ட்ர பவித்ரகம்।
கிரீட ஹாராபரண குண்டலாங்கத பூஷிதம்॥
ஶிகாயக்ஞோபவீதாப்யாம் த்ரிதண்டேன விராஜிதம்॥
வரதாபயஹஸ்தஞ்ச ஶங்கசக்ரதரம் ப்ரபும்॥
பத்மஞ்ச தக்ஷிணே ஹஸ்தே தாரிணம் பீதவாஸஸம்।
கமண்டலுகடாப்யாம் வை ப்ரம்மருஷி கணஸேவிதம்॥
துளஸீபத்மமாலாபிஸ் தபஸா ச ஸுஶோபிதம்॥
பாரமாத்மிகமந்த்ரஜ்ஞம் விகநோமுனிமாஶ்ரயே॥
ஶங்காரிம் வரதாபயோத்த்ருத சதுர்பாஹும் ரமாநந்தனம்
ஹஸ்தாப்ஜம் ஹரிமானஸோத்பவமஹம் பத்மோத்பவஸ்யாக்ரஜம்।
உத்யத்தண்ட கமண்டலாதிபரிதம் கர்பஸ்த சக்ராங்கநம்
வந்தே ஸ்ருக்கரிணாஜிநம் விகநஸம் யோகப்ரபா வல்லபம்॥
ஹேமாச்சாதம் ஸ்படிகஸத்ருஶம் வித்யுதுத்பந்நபாஸம்
வித்யாநாதம் குஶபரிலஸத் கேதநம் தண்டபாணிம்।
வேதாராவம் ருருமயமஹா வாஹநந்தோஶ் சதுஷ்கம்
விம்பீஜந்தம் விகநஸமஹம் ப்ராப்தவந்தம் பஜாமி॥
வேதாந்த வேத்ய நிகிலார்த்தவிதாம் வரிஷ்டம்

சக்ராபயாப்ஜவரதோத்த்ருத ஹஸ்தயுங்கம்।
கேயூரஹாரமணிபிர்விவிதைர் விபூஷம்
ஶாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி॥
கண்டாவலக்ந துளஸீ நளினாக்ஷ மாலா-
காந்த்யாவலிப்த ப்ருதுபீந புஜாந்தராளம்।
ஸ்வர்ணாம்புஜாத வதநோல்லஸதூர்த்வ புண்ட்ரம்
ஶாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி॥
நாராயணாங்க்ரி ஜலஜலத்வய ஸத்தசித்தம்
ராஜத்கிரீட மணிகுண்டல பூஷிதாங்கம்।
வால்மீகி முக்யமுனிபிர்ப்ருயு வந்தநீயம்
ஶாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி॥
ஸ்ரீ வாஸுதேவ சரணாம்புஜ ப்ருங்கராஜம்
காமாதிதோஷஹரணம் பரவிஷ்ணுரூபம்।
வைகாநஸார்ச்சிதபதம் பரமம் பவித்ரம்
ஶாந்தம் ஸதா விகநஸம் முனிமாச்ரயாமி॥
சந்த்ராதித்ய ஸுலோசநம் மம குரும் க்ஷீராப்திகன்யாஸுதம்
ஸஶித்ராநந்த ஸமந்த்ர தந்த்ர விதுஷாமக்ஞாந விச்சேதனம்।
தம் ஸாக்ஷாத்பரவாஸுதேவ சரணத்வந்த்வாம்புஜார்ச்சாபரம்
பக்தாநந்த குணப்ரதம் விகநஸம் நித்யம் ப்ரபத்யே விபும்॥
யேஷாமாஸீதாதி வைகாநஸாநாம்
ஜன்மக்ஷேத்ரம் நைமிஶாரண்ய பூமி:।
தேவோ யேஷாம் தேவகீ புண்யராஶி:
தேஷாம் பாதத்வந்த்வ பத்மம் ப்ரபத்யே॥
யேஷாமாஸீதாதி வைகாநஸாநாம்
ஜன்மக்ஷேத்ரம் நைமிஶாரண்ய பூமி:।
தேவோ யேஷாம் தேவகீ புண்யராஶி:
தேஷாம் பாதத்வந்த்வ பத்மம் ப்ரபத்யே॥
பவ்யாய மௌநிவர்யாய பரிபூதாய வாக்மிநே।
யோக ப்ரபா ஸமேதாய ஸ்ரீமத் விகநஸே நம:॥
லக்ஷ்மீ வல்லப ஸங்கல்ப வல்லபாய மஹாத்மநே।
ஸ்ரீமத் விகநஸே பூயாந்நித்ய ஶ்ரீர் நித்ய மங்களம்॥

ஸ்ரீமத் விகனஸாசாரியர் சாற்றுமறை

ஸர்வதேஶதஶா காலேஷ்வ வ்யாஹத பராக்ரம।
வைகாநஸார்ய திவ்யாக்ஞா வர்த்ததா மபிவர்த்ததாம்॥
வைகாநஸார்ய திவ்யாக்ஞா ப்ரதிவாஸர முஜ்வல॥
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ॥
ஸ்ரீவேங்கடேஶஶ்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய।
ஸ்ரீமத் வைஷ்ணவஶ்ரிய மநுபத்ரவாமநுதினம் ஸம்வர்த்தய॥
நமோ வைகாநஸார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே।
ரமாபதி தநூஜாயா ஸ்த்வர்ச்சா ஶாஸ்த்ர ப்ரதாயிநே॥
தேவராஜ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்।
ப்ருக்வாதி முனிபிர்மாந்யம் வந்தே ஸ்ரீவிகனோ முநிம்॥
ஸ்ரீலக்ஷ்மீ வல்லபாரம்பாம் விகனோமுனி மத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்॥

வாழி திருநாமம்

வாழி திருமார்பன் மாமனத்தில் வந்துதித்த
வாழி விகநாமுனிவன் மாநிலத்தில் - ஆழியவன்
தூயவருளால் தந்த சூத்திரத்தினால் செய்த
மாயனடி யார்ச்சிப்பார் மதம்.
திருமார்பன் மனத்தெழுந்து திகழுமவன் வாழியே
திருவாராதனை விதியை செப்பினான் வாழியே
தருவார்ந்த நைமிசாரத்துதித்தான் வாழியே
தாரணியில் வைஷ்ணவத்வம் தழைக்க வந்தோன் வாழியே
மருவார்ந்த துளவமணியணிமார்பன் வாழியே
மரீசி முதன் முனிவர்கட்கு மனுவளித்தோன் வாழியே
குருவாகி முக்திநெறி கூறினன் வாழியே
கோதில் விகநாரியனார் குவலயத்தில் வாழியே
நாராணன்தாள் வாழ்க - நறியமலராள் வாழ்க
ஆரணங்கள் வாழ்க - அறம் வாழ்க
தாரணியில் மன்னுமடியார் வாழ்க
வாழி விகநோமுனிவன் இன்னமொரு கற்பாண்டிரும்.

சீரார்ந்த செங்கமலத் திருவடிகள் வாழியே
திருவரையில் சாத்திய செம்பொன்னுடை வாழியே
தாராரார்ந்து நூலணிந்த தடமார்பும் வாழியே
தனிவரை போலிலங்குந்திருத்தட தோள்கள் வாழியே
ஏராரார்ந்த நிலமதிபோலிலங்கு முகம் வாழியே
என்றுமருள் பொழியும் இருதிரு விழிகள் வாழியே
நீராரார்ந்த மணியொளியை நிகர்வடிவம் வாழியே
நிமல விகநாரியனார் நீடூழி வாழ்யே

ஆவணியில் திருவோணத்தவரித்தோன் வாழியே
அத்ரிப்ருகு காஸ்யபர்களின் கருத்தறிந்தோன் வாழியே
நைமிசாரண்யத்தில் வீற்றிருந்தோன் வாழியே
நான்முகனும் நாரதரும் பணியவந்தோன் வாழியே
எண்ணிலா சிஷ்யருக்கெடுத்துரைத்தோன் வாழியே
தண்டமொடு கமண்டலமும் தாங்கியிருந்தோன் வாழியே
வண்துளப மார்பனைப்போல் விளங்க வந்தோன் வாழியே
எங்கும் நாராயணனென்று ஏற்றிவைத்தோன் வாழியே
சங்கொடு சக்கரமும் தரித்திருந்தோன் வாழியே
எங்கள் விகநஸ மஹாமுனி இருநற்பதங்கள் வாழியே !

திருநாள் பாட்டு

பங்கயமங்கையணிந்திடு மார்பன் பரிந்து மகிழ்ந்திடுநாள்।
பல்கிளை நங்குலர் வேதியர் நான்மறை பள்ளியிறைஞ்சிடு நாள்।
கொங்கலர் நைமிசமாவன மாதவர் கூர்வுணர் வுற்றிடு நாள்।
கோதில் வைகாநஸ மந்திர விதியே விதியென்று குறித்திடு நாள்।
பொங்கு தரங்க நெடுங்கடல் சூழ்புவி புண்ணியமோங்கிடு நாள்।
புன்சமயத்தவர் வர்த்தமொழிந்து புகழ்ந்து மிறைஞ்சிடு நாள்।
மங்கள விகனஸதேசிகன் மேதினி மன்னியுதிடு நாள்।
மதிநிறை பூரணையாவணியில் திருவோணத் திருநாளே॥

மங்களானி பவந்து

உத்ஸவாதி விவரங்கள்

கலியுகாதி 5102 ஸ்ரீ விக்ரம வருஷம் ஆவணி மாதம்

ஆவணி	ஆக	கிழமை	உத்ஸவம்
3	19	சனி	திருவல்லிக்கேணி ஸ்ரீரங்கநாதர் ஜ்யேஷ்டாபிஷேகம்
7	23	புத	மேற்குமாம்பலம்ஸ்ரீராமர்கோவில்ஸ்ரீகிருஷ்ணன் புன்னைமர வாஹனம்
9-11	25-27	வெள்-ஞா	திருவான்மியூர் ஸ்ரீதிருவேங்கடமுடையான் திருப்பவித்ரோத்ஸவம்
10	26	சனி	திருவல்லிக்கேணி ஸ்ரீராமர் ஜ்யேஷ்டாபிஷேகம்
14-17	30-2	புத-சனி	சோளஸிம்ஹபுரம் (சோளிங்கர்) ஸ்ரீநரஸிம்ஹர் திருப்பவித்ரோத்ஸவம்
	செப்.		
18	3	ஞா	திருவல்லிக்கேணி ஸ்ரீநரஸிம்ஹர் ஜ்யேஷ்டாபிஷேகம் & ஸுதகலஸ திருமஞ்ஜனம்
23-29	8-14	வெ-வி	திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி திருப்பவித்ரோத்ஸவம்
24-28	9-13	சனி-புத	பைராகி மடம், ஸ்ரீநிவாஸன், பட்டணம் கோவில், மயிலை மாதவ, சென்னகேசவர் திருப்பவித்ரோத்ஸவம்
24	9	சனி	நாவல்பாக்கம் திருப்பவித்ரோத்ஸவாரம்பம்
25	10	ஞா	ஸ்ரீவாமன ஜயந்தி - பாத்ரபத ஸுக்ல ஸ்ரவண த்வாதஸி

சென்ற 30.7.2000 அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் ஐந்துகருட சேவையும், 3.8.2000 அன்று ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரங்கமன்னார் திருத்தேர் மஹோத்ஸவமும் சிறப்பாக நடைபெற்றன.

சென்ற 18.7.2000 அன்று செஞ்சி வட்டம் கெங்கபுரம் கிராமத்தில் ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் விகனஸாசாரியருக்கு மிக வைபவமாக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நடைபெற்றது.

சென்ற 27.7.2000 அன்று செங்கல்பட்டு - ஆத்தூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் விகனஸாசாரியருக்கு திருநக்ஷத்ர மஹோத்ஸவம் மிகவும் விஸேஷமாக நடைபெற்றது.

சென்ற 5.7.2000 அன்று சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீஸத்யநாராயணப் பெருமாள் ஸன்னிதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் விகநஸாசாரியருக்கு உத்ஸவர் நூதன ப்ரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது.

சென்ற 2.8.2000 அன்று சென்னை திருவான்மியூரில் ஸ்ரீதிருவேங்கடமுடையான் ஸன்னிதியில் ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாண மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

அம்மாமிக்கு அன்புடன் - 4

ஸ்ரீ.கோ. ஸ்வர்ணஸரோவர்

கடந்த மூன்று மாதங்களாக வெளிவரும் தொடர் கட்டுரைகள் குறித்து விமர்சனம் ஏதும் வரவில்லை என்று ஆசிரியர் கூறினார்.

ஒரு மாமா மட்டும் வார்த்தைகள் சற்று தடிப்பாக உள்ளன என்று குறைபட்டுக் கொண்டாராம்.

யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்பது கட்டுரையாளரின் நோக்கம் அல்ல. நம்முடைய வைகானஸ தர்மங்களைப் புரிந்து கொள்ளாமல் பாதை விலகிச் செல்லாமல் திருத்திப்பணி கொள்ள வேண்டும் என்பதே நோக்கம்.

கடைக்குப் போய் கத்திரிக்காய் வாங்கி வருகிறோம். அதை சமைத்து சாப்பிடு முன் அதன் காம்பு பாவாடை முதலியவற்றையும் புழுத்துப் போனவற்றையும் அகற்றி சிறு துண்டுகளாகச் செய்து வேக வைத்து உண்கிறோம். கரியமுது திருத்துவது என்பது இதுதான். வேண்டாத வற்றை அகற்றி விட வேண்டும். சரியாகத் திருத்தவில்லையெனில் வயிற்றுக்கு உபத்ரவம் ஏற்படும்.

நமது சந்ததிகளையும் இவ்வாறே திருத்திப் பணி கொள்ளவேண்டும். இடிப்பார் இல்லாமையால் கெடும் என்பார்கள்.

'அப்ரியஸ்ய து பத்யஸ்ய வக்தா ஶ்ரோ தாச துர்லப:

ப்ரியமான வார்த்தைகளாக இல்லாவிட்டாலும் நன்மை பயக்கும் வார்த்தைகளைச் சொல்பவர் அரிது. சொன்னாலும் கேட்பவர் அரிது.

அழ அழச் சொல்பவர் தம்மனிதர் சிரிக்கச் சிரிக்கச் சொல்பவர் பிறமனிதர்

இவைகளையெல்லாம் சிந்திக்க வேண்டும்.

ஒருவன் தானம் கொடுக்கிறான் ஒருவன் தானம் வாங்குகிறான்.

கொடுப்பவன் சிறந்தவனா வாங்குபவன் சிறந்தவனா என்றால் கொடுப்பவனே சிறந்தவன் என்று குழந்தைகூட சொல்லிவிடும். தானம் வாங்குபவன் கொடுப்பவனை நிர்பந்திக்கலாமா. வாங்குபவன் கை கீழே இருக்கிறது. கொடுப்பவன் கை மேலே இருக்கிறது ஸாலாங் க்ருத கன்னிகாதானம் என்று கல்யாண பத்ரிகையில் எழுதுகிறோம். கன்னிகையை தானம் செய்பவன் தானே உயர்ந்தவன். நடைமுறையில் கன்னிகையை தானம் பெறுபவர்கள் செய்யும் தடபுடல்கள் தான் எவ்வளவு!

வெள்ளி பஞ்சபாத்திரம் உத்தரிணி வெள்ளி செம்பு வெள்ளி ஸ்ரீமூர்த்தி இவைகளைக் கொடுக்க வேண்டுமென்று கன்யாதானம் செய்பவனை தானம் பெறுபவர் நிர்ப்பந்திக்கிறார். சரி வாங்கிய பொருள்களை தார்மீகமாகப் பயன்படுத்துகிறார்களா? பஞ்சபாத்திரம் உத்தரணி வைத்துக் கொண்டு தினம் சந்தியாவந்தனம் செய்ய வேண்டாமா? வெள்ளிச் செம்பில் தீர்த்தம் வைத்துக் கொண்டு தானமாகக் கொடுக்கப்பட்ட வெள்ளிக் கண்ணனுக்கு (ஸ்ரீமூர்த்திக்கு)

தினம் திருவாராதானம் செய்யவேண்டாமா? இவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்காகத் தானே இவைகள் தானம் செய்யப்படு கின்றன. ஸ்ரீமூர்த்தியை தானம் வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டி வைப்பதால் யாருக்கு என்ன பயன்- சரிகை அகலமாகப் போட மயில் கண்பத்தாறு பட்டு வேஷ்டியை தானமாகப் பெறுகிறான். எத்தனை நாட்கள் பஞ்ச கச்சம் வைத்து வேஷ்டி அணிந்து கொள்கிறான்? தர்மத்தை நடத்த உதவியாக ஆண்டு அனுபவிப்பதற்காகத்தானே இந்த பொருள்கள் வழங்கப்படுகின்றன. இவற்றைக் கொடுக்கத்தான் வேண்டும் என்று நிர்ப்பந்தித்து வாங்கி முறையாகப் பயன்படுத்தாமல் பூட்டி வைத்துக் கொள்வது சரியா கஷ்டகாலத்திற்கு ஜீவனாம்சமாகவா இவற்றைக் கொடுக்கிறார்கள். கல்யாண சமயத்தில் பிள்ளையின் பெற்றோர் பெண்ணைப் பெற்றவர்களை எவ்வளவு துச்சமாக நடத்து கிறார்கள். அவர்கள் தாங்கள் தானம் வாங்குபவர்கள் என்பதை மறந்து விடுகின்றனர். பெண்ணைக் கொடுப்பவர் தன் வீட்டுக்கு ஒரு க்ருஹ லக்ஷ்மியை அனுப்பி வைக்கிறார் என்பதை நினைப்பதில்லையே!

ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸீதா கல்யாணத்திற்குமுன் தசரதர் ஜனகர் மாளிகைக்கு வருகிறார். ஜனகரை (பெண்ணைப் பெற்ற வரை) உள்ளே வரலாமா எனக் கேட்கிறார். புரோகிதர்களுடன் கல்யாண முகூர்த்தத் துக்கு தயாராய் வாருங்கள் என்று ஜனகர் சொல்கிறார் அதைக் கேட்டு தசரதர்.

''ப்ரதிக்ரஹோ தாத்ருவஸ: ஸ்ருதமேதத் மயா புரா
யதா வக்ஷ்யஸி தர்மக்ஞ தத்கரிஷ்யாமஹே வயம்''

கொடுப்பவனை அனுசரித்துத்தான் வாங்குபவன் நடந்து கொள்ள வேண்டும் என்று முன்னோர்கள் சொன்னதைக் கேட்டிருக்கிறேன் அதனால் ஸீதையை கன்யாதானம் செய்து கொடுக்க உள்ள நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்டு அதன்படி செய்கிறோம் என்று சக்ரவர்த்தியான தசரதர் கூறுகிறார். இராமாயண கால இந்த தர்மம் இப்போது தலைகீழாகப் போய்விட்டது. ஒவ்வொரு விஷயத்தையும் தானம் வாங்கும் பிள்ளை வீட்டாரிடம் கேட்டுத்தான் தானம் கொடுக்கும் பெண் வீட்டார் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு மஹாயுத்தமே நடைபெற்று விடுகிறது.

கல்யாணம் என்பது உபய ஸம்பந்திகளும் பரஸ்பரம் அன்புடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடத்தப்படவேண்டும்.

கல்யாணம் செய்து கொள்வது தர்மப்ரஜா விருத்திக்காக கன்னிகை யும் கல்யாணமானவுடன் மாமியார் மெச்சிய மருமகளாக வாழ வேண்டும். மாமியாரை மொத்திய மருமகளாக இருக்கக் கூடாது. ஓரகத்திகள், நாத்திகள், மைத்துனர்கள் இவர்களுடன் அன்புடனும் அனுசரணையுடனும் பழகவேண்டும். தனக்குக் கணவனாக வந்துள்ள வன் இது நாள் வரை இவர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்தவன் என்பதை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். மாமியார் மாமனார் இவர்களைத் தன் சொந்த தாய் தகப்பனாகக் கருதி அன்புடன் பரிந்து பணிவிடை செய்ய வேண்டும். அவர்களுடைய அநுபவமிக்க ஆலோசனைகளை கவனமுடன் கேட்டுப் பயன்பெற வேண்டும்.

மருத்துவக் கட்டுரை-7

எஸ். ஸ்ரீதரன், பரம்பரை சித்த மருத்துவர், சதுரங்கப்பட்டினம்.

பிரண்டை

இது ஒரு மூலிகை வகையை சேர்ந்தது என்றாலும் இதற்கு அதிக இலைகள் கிடையாது. மூட்டுக்கு ஒரு இலை வீதம் தான் காணமுடியும் ஒரு செண்டிமீட்டர் முதல் இரண்டு செண்டிமீட்டர் கனமுள்ளதாக இருக்கும். உடலை நன்கு காப்பதால் இதற்கு வச்சிரவல்லி என்ற பெயரும் உண்டு. அதிக பசியையும் உண்ட உணவை சீரணமாக்கும் தன்மையும் இதற்கு உண்டு. அதனால்தான் நம்முன்னோர்கள் சிரார்த்தம் (திவசம்) போன்ற நாட்களில் பிரண்டை துகையல் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினர். அதனால்தான் பிராமணார்த்தகாரர்களுக்கு இத்துகையலை சாதத்துடன் கலந்து சாப்பிடுவதால் எளிதில் ஜீரணமாகி அதிக பசியை தூண்டிவிடுவதால் அவர்களால் நன்கு சாப்பிடமுடிகிறது. எனவேதான் எல்லாருடைய வீட்டிலும் சிரார்த்தம் போன்றவைகளுக்கு பிரண்டை முக்கியமானதாக கருதப்படுகிறது. இவ்வளவு சிறப்புமிக்க இந்த வச்சிரவல்லி அப்பளம் தயாரிப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இன்னும் கிராமங்களில் எதற்கும் அடங்காபிள்ளை பிறந்துவிட்டால் அதற்கு அந்த தாயானவள் இப்படிப்பட்ட பிள்ளையை பெத்ததற்கு பிரண்டை வயிற்றில் கட்டிக்கொள்ளலாம் என்பர். அதற்கு பொருள், உதவாத பிள்ளையைவிட, அந்த வயிற்றில் உள்ள பிரச்சனைகளை தீர்ப்பதில் பிரண்டை எவ்வளவோ மேல் எனும் பொருளில் அவ்வாறு கூறுவர். இத்தனை சிறப்புமிக்க பிரண்டையின் பயனை சற்று பார்ப்போம்.

1. இதன் துகையிலை சாதத்துடன் கலந்து சாப்பிடுவதால் நல்ல ஜீரண சக்தியை தரும்; ரத்தத்தை சுத்தம் செய்து சிறுநீரைப் பிரித்து சரளமாக இறங்க செய்யும். கிட்னிக்கு நல்ல பலத்தைத்தரும். ஆகவே வாரத்திற்கு ஒருமுறை பிரண்டை துகையல் சாப்பிடலாமே.

2. சிறுநீர் பையில் கல் உற்பத்தியாகி சிலசமயம் சிறுநீர் வெளியேறும் துவாரத்தை அடைத்துக் கொள்ளும் இதனால் சிறுநீர் வெளியேற முடியாமல் சிறுநீர் பையில் தேங்கி விடும். இதனால் சிறுநீர்பை உப்புச மடையும் தாங்கமுடியாத வேதனை உண்டாக்கும். நேரம் போக போக வேதனை அதிகரிக்கும். இந்த நிலையில் சிறுநீரை வெளியேற்ற இந்த பிரண்டை நன்கு பயன்படுகிறது. எப்படி பயன்படுகிறது எனில் பிரண்டையை கொண்டு வந்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வாணலியில் போட்டு அத்துடன் இரண்டு காய்ந்த மிளகாயையும் சருகிவரும் சமயம் ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு மூடி அரை டம்ளர் அளவு சுண்டகாய்ச்சி இளஞ்சூடாக இருக்கும் பொழுதே இறுத்து உடனே குடிக்க கொடுத்த கால்மணி நேரத்தில் சிறுநீர் வேகமாக வெளியேறும்.

3. மேற்படி பிரண்டையை சீவி வதக்கி சாறு பிழிந்து காதில் இரண்டொரு துளிவிட காதுச் சீழ் மாறும். மேற்படி சாற்றினை மூக்கில் வரும் ரத்தப் போக்கை நிறுத்த மூக்கில் விட அந்த ரத்தம் நிற்கும்.

4. இதன் வேரை நிழலில் உலர்த்தி பொடித்து 3 கிராம் கொடுத்து வர முறிந்த எலும்புகள் சீக்கிரம் கூடும். மேற்படி பவுடரை வெந்நீரில் குழைத்து மேலுக்கு போடலாம். எலும்பு முறிவுக்கு குறைந்த பட்சம் ஒரு மாதகாலம் மேலுக்கு பத்து போடவேண்டும். (தொடரும்)

மணிஓசை - 8

தஞ்சாவூர் Dt. கருப்பூர் லக்ஷ்மண பட்டாச்சாரியர் பிரசித்தமானவர். தமிழ்நாடு முழுவதும் பிரபலமான இவர் தஞ்சை மண்ணுக்கே உரியவர்; ஜோஸியத்தில் வ்யாபகர்; இவரது அந்தரங்க சீடர்கள் பலர் இவரது பெருமையை தற்போதும் நிலைநாட்டி வருகின்றனர்.

தஞ்சாவூரில் கருப்பூர் என்றொரு கிராமம்; அந்த ஊருக்கே வைகானஸ கருப்பூர் என்பது பெயர்; இன்றும் பல குடும்பங்கள் நமது பெருமையைக் காத்து வருகின்றன இங்கு; பலர் மந்த்ர சாஸ்திரங் களில் வல்லவர்கள்; ஸ்ரீ உ.வே. K.R. லக்ஷ்மண பட்டாச்சார் இந்த ஊரைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பைவிட ஆகமப் பயிற்சியையே அதிகம் பெற்றவர் இவர். தந்தையார் K.R. ரங்கசாமி பட்டாச்சார் மற்றும் Dr. லக்ஷ்மண பட்டாச்சாரிடம் பயிற்சி பெற்றவர் இவர். இருநூற்றைம்பது ஸம்புரோக்ஷணங்களுக்கு மேல் அன்வயித்துள்ள இவர் நடுக்காவிரி லக்ஷ்மிநாராயணப் பெருமாள் ஸன்னிதியில் அர்ச்சகராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருபவர் இவர்; ரத்னகிரி அர்ச்சகர் மாநாட்டில் தாடாளன் ஸன்னதி R. சேஷாத்ரி பட்டாச்சாரியார் மூலம் ''அலங்காரமணி'' என்ற பட்டம் பெற்ற இவர் அலங்காரசிம்மம் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

விளம்பரமில்லாமல் பல திருமணங்களை நடத்திவைத்து 'மணமாலை' சேவை செய்து வருபவர் இவர். பல்லாண்டுபாடி இவரைப் பாராட்டுவோம். (விகனஸப்ரியன்) **தொடரும்**

கேள்விபதில்

கே: ஸ்ரீ P.S. சக்ரவர்த்தி பட்டாச்சார், ஒப்பிலியப்பன் கோவில்.

நம் சமூகத்தில் ஸ்ராத்தம் சகோதரர்கள் ஒரிரு வருடங்கள் சேர்ந்து செய்துவிட்டு பிறகு பிரிந்து அவரவர் ஊரில் தனியாக செய்தார்கள். பிறகு மறுபடியும் சேர்ந்து செய்கிறார்கள். இது தவறானதா? சரியானதா?

ப: அனைத்து சகோதரர்கள் முதலில் இருந்து ஒன்றாக செய்தால் ச்ராத்தம் செய்வதில் மாறுபாடு இல்லை. ஒரு முறை நடுவில் பிரிந்துவிட்டாலும் கடைசிவரை தனியாகத்தான் செய்யவேண்டும்.

அதாவது ஒரே ஆத்தில் செய்தாலும் - வைச்வதேவ ஆகாரம், பிண்டப்ரதானம் ப்ராஹ்மணபோஜனம் போன்றவை தனியாகச் செய்யவேண்டும்.

Dr. ஸ்ரீ.உ.வே. S. முத்துபட்டர், புஞ்சை சங்கேந்தி.

குழந்தைகளுக்கு, 1. தயவுசெய்து - Please, 2. உங்களுக்கு நன்றி - Thank you, 3. என்னை மன்னியுங்கள். Please Excuse me. 4. வருந்துகிறேன் - sorry, 5. நமஸ்காரம் - Good morning, 6. ஸௌக்கியமா? How are you? ஆகிய வார்த்தைகளைக் கற்றுக் கொடுங்கள். மரியாதை கொடுக்கும் பண்பு அவர்களுக்குத் தானே வரும்.

ஸ்ரீவைகாநஸகல்பசூத்ரம் கட்டுரை அடுத்த இதழில் வெளி வரும் என தெரிவித்துக் கொள்கிறோம்.

மணமாலை

மணமகன் தேவை

F-88 கௌதமம் ஆயில்யம் 29 வயது S.S.L.C. தனியார்துறை சம்பளம் ரூ.2000. தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி ஸ்ரீ T. ஸ்ரீனிவாச பட்டாச்சார், C/o. N.S. ராமபட்டர், 3, பெருமாள் கோவில் தெரு, தல்லாகுளம், மதுரை-625 002. போன்: (0452) 523617

F-89 கௌதமம் பரணி 29 வயது 10 வது தேவைப்படும் வரன் அர்ச்சகர்/ பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ P.S. துரைசாமி பட்டாச்சார், பெரமூர் போஸ்ட். அய்யம்பாளையம். முசிறி தாலுகா. 621 202.

F-90. ஆகஸ்தியம், திருவாதிரை, 15.4.75, 25 வயது 5'-5'' (B.Com). தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர்/அர்ச்சகர்: முகவரி ஸ்ரீ-8 ராமஸ்வாமி பட்டாச்சார், அர்ச்சகர் 3/70, காசுக்கார தெரு, அம்மையப்பன் போஸ்ட், திருவாரூர் Dt.

F-91. கௌதமம், உத்ராடம், 9.7.71, 28 வயது, 5 அடி B.Com, தனியார் துறை சம்பளம் ரூ. 1000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர், முகவரி ஸ்ரீ. R. வெங்கட்ராம பட்டர் அர்ச்சகர், 24-A, சிவன்கோவில் தெரு, பாண்டமங்கலம் Post, நாமக்கல் Dt. 637 208. Phone (04268) 23797.

F-92. கௌதமம், மகம், 1.7.76, 24 வயது, 5 அடி 10th. தேவைப்படும் வரன். அர்ச்சகர்/பணியில் உள்ளவர், முகவரி: ஸ்ரீ N. வேங்கட வரதபட்டாச்சார், மருதாடு Vill & Post, வந்தவாசி Tk. திருவண்ணாமலை Dt. - 604 405.

F-93 கௌசிகம், அவிட்டம், 15.6.79, 21 வயது, 5'4'', +2, தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ A.R. சுந்தரராஜ பட்டாச்சார், 13-10-49, ஈஸ்வரன் கோவில் தெரு, சித்தூர். A.P. 517 001. Ph. 08572-31284

F-94 ஆகஸ்த்யம், பரணி, (7.1.78, 22 வயது 154 செ.மீ.) 10 வது. தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ D. நாகராஜ பட்டாச்சார், 7/73, சன்னதி தெரு, நாகலாபுரம் போஸ்ட். சித்தூர் Dt. A.P. 517 589.

F-95 ஆகஸ்த்யம், பூராடம் 4 வது பாதம், 21 வயது +2. தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியில் ள்ளவர். முகவரி: ஸ்ரீ A. உப்பிலியப்ப பட்டாச்சார், கலியபெருமாள் கோவில், கல்லங்குரிச்சி போஸ்ட், அரியலூர்-617 705.

*F-87 கௌதமம் பூசம் (17.8.63) B.A. 5' 3'' தனியார் துறை சம்பளம் ரூ.750 தேவைப்படும் வரன் அர்ச்சகர் / பணியில் உள்ளவர் முகவரி ஸ்ரீ A.V. இராகவாச்சாரியலு 2-59 Old BajanaiKoil Street, Nagari post, Chittoor Dt. 517590 A.P.

மணமகள் தேவை

M-64 கௌதமம் சதயம் 1.1.1971 வயது 29. (B.Com) 5'4'' மத்திய அரசுதுறை சம்பளம் ரூ.4500. தேவைப்படும் வதூ படித்த அழகிய குடும்பப்பாங்கான பெண். முகவரி. ஸ்ரீ R. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 1/23, கீழகல்கண்டார் கோட்டை, திருச்சி Dt. 620 011. Phone: (0431) 444318

M-65 பாரத்வாஜம், திருவாதிரை 1.1.72 வயது 28. 160 c.m. M.A. மாநில அரசுதுறை (தற்காலிகப் பணி) சம்பளம் ரூ.1500 தேவைப்படும் வதூ பட்டதாரியான பெண். முகவரி ஸ்ரீ D.S. வீரராகவ பட்டாச்சார், 62/53, மேலப்புதுத்தெரு, சிதம்பரம், கடலூர் Dt. 608 001. Phone: (04144) 30787

M 66 பார்க்கவம் திருவோணம் 24.10.74 26 வயது 167 c.m. B.Sc., தனியார் துறை சம்பளம் ரூ.15000. தேவைப்படும் வதூ படித்த பட்டதாரியான பெண். முகவரி. ஸ்ரீ S. பார்த்தசாரதி பட்டாச்சார், 11, (Rockfort) நகர், இந்தியன் வங்கி காலனி, திருச்சி Dt. 620 021. Phone: (0431)351110

M-67. ஆத்ரேயம், உத்திராடம். 2.2.73, 27 வயது, 5' 6'' - 10 th. அர்ச்சகர், சம்பளம் ரூ, 1500/- தேவைப்படும் வது. குடும்பாங்கான பெண் முகவரி: ஸ்ரீ. R. வெங்கட்ராமபட்டாச்சார், பெருமாள் கோவில் அர்ச்சகர், பழமர் நேரி P.O. திருகாட்டுப்பள்ளி (via) தஞ்சை Dt. - 613 104.

M-68. காஸ்யபம், உத்திராடம், 27.10.68, 31 வயது 5'2'' B.A. தனியார் துறை, சம்பளம் ரூ. 5000/- தேவைப்படும் வது. பட்டதாரியான பெண். முகவரி: ஸ்ரீ K. சேஷாத்திரி பட்டாச்சார், 183, பட்டமங்கலத்தெரு, மயிலாடுதுறை P.O. நாகை Dt. 609 001.

M-69 பார்க்கவம், பூசம், 18-5.72, 28 வயது, 160 செ.மீ. B.E., மத்திய அரசுப் பணி. சம்பளம் ரூ.10,000/-. தேவைப்படும் வதூ. குடும்பப் பாங்கான பட்டதாரியான பெண். முகவரி: ஸ்ரீ D. சந்தான பட்டாச்சார், 18-3-34, B, காதிகாலனி மெயின் ரோடு, சாந்தி நகர், திருப்பதி-517 507. Ph. 08574-33058.

M-70 வாசிஷ்டம், திருவாதிரை, 15.8.75, 25 வயது, B.Com., D.C.A., அர்ச்சகர் சம்பளம் ரூ.2000/-. தேவைப்படும் வதூ, படித்த குடும்பப் பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ D.S. நாராயண பட்டாச்சார், 22, பாண்டியன் தெரு, சேர்வை முனுசாமி நகர், வேலப்பாடி பூந்தோட்டம், வேலூர் Dt. 632001, Ph. 0416-211762

M-71 ஆகஸ்த்யம், ரேவதி, 71, 29 வயது, 155 செ.மீ. 10 வது. அர்ச்சகர். சம்பளம் ரூ.3000/-. தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி: ஸ்ரீ D. நாகராஜ பட்டாச்சார், 7/73, சன்னதி தெரு, நாகலாபுரம் போஸ்ட், சித்தூர் Dt. A.P. 517589

*M-40. ஆத்ரேயம், அனுஷம், 19.8.72, 28 வயது, 5'6'' - 10th. தனியார்துறை, சம்பளம் ரூ. 3500/- தேவைப்படும் வது. குடும்பபாங்கான பெண், முகவரி. ஸ்ரீ R. கோதண்டராம பட்டாச்சார், ஸ்ரீவித்யா மந்தர பூஷணம், ஆனந்த தாண்டவபுரம், மயிலாடுதுறை Tk. நாகை Dt. - 609 103, Ph. No. (04364) 23925.

*M-63 கௌதமம், பூராடம், 24.12.65 35 வயது, 165 செ.மீ. M.Com., B.Ed., அரசுதுறை சம்பளம் ரூ.4,500. தேவைப்படும் வதூ ஆசிரியை/ ஆசிரியை பயிற்சி பெற்ற பட்டதாரியான பெண். முகவரி ஸ்ரீ A.V. இராகவாச் சாரியலு, 2-59, Old Bajanai Koil St, Nagari-Chittoor Dt. 517 590.

*M-25 ஆத்ரேயம், ரேவதி, 8.11.73, 27 வயது, 185 செ.மீ. +2 (B.A.) அர்ச்சகர். தனியார்துறை சம்பளம் ரூ.4000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கு ஏற்ற பெண். முகவரி: ஸ்ரீ S. சுந்தரராஜ பட்டாச்சார்யர், 14-H, பாய் காம்பவுண்டு, N.S. கோனார் தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை-625 011.

* M-32 கௌதமம், திருவாதிரை, 30 வயது, 5'4''. B.Sc., D.C.A. தனியார் துறை சம்பளம் ரூ.3000/-. தேவைப்படும் வதூ படித்த குடும்பப் பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ M.S. கோபால பட்டாச்சார், 54, பெருமாள் கோவில் பின்புறம், மிலட்டூர் போஸ்ட். தஞ்சை மாவட்டம். 614 301.

*M-36 ஆத்ரேயம், உத்திரட்டாதி, 12.1.62, 39 வயது, 5'5'', +2, Type Both, அர்ச்சகர் தனியார் துறை, சம்பளம் ரூ.1500/-. தேவைப்படும் வதூ,

குடும்பப் பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ S.R. கோபால பட்டாச்சார், 72, தெற்குத் தெரு, தாந்தோன்றிமலை, கரூர்-639 005.

குறிப்பு: இந்த பகுதியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பரங்கள் குலஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மூன்று மாதத்திற்கு வெளியிட உத்தேசித்துள்ளோம் தேவைப்படுவோர் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதில் பழைய Sl.No. குறிப்பிட்டு அனுப்பவும்.

★ இக் குறியீடு செய்யப்பட்ட விளம்பரம் ஏற்கனவே வெளியானவை.

மணவாழ்த்து

கோவை ஸ்ரீ P.S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார் குமாரத்தி செள. சித்ரா விற்கும் நாகை Dt. பாலக்குறிச்சி ஸ்ரீ R. லக்ஷ்மிநாராயண பட்டாச்சார் குமாரன் சிர. கோபாலகிருஷ்ணனுக்கும் 5.7.2000 அன்று கோவையில் விவாஹம் சிறப்பாக நடைபெற்றது. நமது பத்திரிகைகளுக்கு ரூ.51/- சம்பாவனையாக வழங்கப்பட்டது.

7.7.2000 அன்று ஒப்பிலியப்பன்கோவில் ஸ்ரீ P.V. கிருஷ்ண பட்டாச்சார் குமாரத்தியின் விவாஹத்தில் நமது பத்திரிகைக்கு ரூ.101/- சம்பாவனையாக வழங்கப்பட்டது.

ஷஷ்டியப்த பூர்த்தி

குடியாத்தம் ஸ்ரீ உ.வே. G.R. ஸ்ரீனிவாஸ பட்டாச்சாரியருக்கும் ஸ்ரீமதி புஷ்பவல்லி அம்மங்காருக்கும் 23.6.2000 அன்று குடியாத்தத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

ஸீமந்தம்

திருப்பத்தூர் ஸ்ரீ S.V. துரைசாமி பட்டாச்சார் குமாரன் சிர. ராகவ பட்டாச்சாருடைய தர்மபத்னீ ஸௌ. கௌசல்யாவிற்கு 9.8.2000 அன்று சென்னை, திருவல்லிக்கேணியில் பும்ஸவன ஸீமந்த சுபமுஹூர்த்தம் நடைபெற்றது.

ஸங்க ஆண்டுவிழா

வரும் 15.8.2000 அன்று பிற்பகல் 1 மணி அளவில் தென்னிந்திய வைகானஸ அர்ச்சக ஸங்கத்தின் 45 வது ஆண்டுவிழா சென்னை திருவல்லிக்கேணி நெ.3, இருசப்ப கிராமணி தெருவில் உள்ள M.M.B.P. Fund கல்யாண மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதனை சங்க அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
ஸங்க நிர்வாகிகள்

நீண்ட நேரம் சிந்தித்தபின் உங்கள் நாவை அசையுங்கள்.
நீங்கள் அவமானம் அடையமாட்டீர்கள் - அரிஸ்டாட்டில்
விட்டுக் கொடுக்க நினைப்பவன் கெட்டுப்போவதில்லை.
கெட்டுப்போக நினைப்பவன் விட்டுக் கொடுப்பதில்லை.
அன்பு கோபத்தை அகற்றும். கோபம் அன்பை அகற்றும்.

இந்த மாதப் ப்ரபலம்

பெயர் : ஸ்ரீ.உ.வே. V. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார்

பெற்றோர் : ஸ்ரீ.உ.வே. வேங்கட பட்டாச்சார்,
ஸ்ரீமதி ஸீதாலக்ஷ்மி அம்மாள்

பிறந்தநாள் : பார்திவ ஐப்பசி உத்திரட்டாதி

ஸ்தானீகம் : ஸ்ரீகரியமாணிக்கப் பெருமாள்
தேவஸ்தானம், புரிசை

முகவரி : ஸன்னிதி தெரு, புரிசை கிராமம்,
Via. அனக்காவூர், செய்யார் Tk.
திருவண்ணாமலை Dt.

ஆற்றிய தொண்டுகள்: திருப்பதி, திருவஹிந்த்ரபுரம், பாண்டிச்சேரி, பரிக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், செய்யார், கூவத்தூர். வாலாஜா போன்ற பல திவ்ய தேசங்களில் 200 க்கும் மேற்பட்ட ஸம்ப்ரோக்ஷணங்களில் ஆசார்யனாக அந்வயித்துள்ளார். ஸ்ரீவைகாநஸ ஆகம வித்தகர் எனும் விருதை தமிழக அர்ச்சகர் ஸமூஹநல சங்கம் இவருக்கு வழங்கி கௌரவித்தது. அனக்காவூர் ஸ்ரீதுரைஸ்வாமி பட்டாச்சார், வாலாஜா ஸ்ரீ ராமகிருஷ்ண பட்டாச்சார், ஆற்காடு ஸ்ரீ நாராயண பட்டாச்சார், பாவூர் ஸ்ரீமோஹன பட்டாச்சார் மற்றும் பல ஸிஷ்யர்களுக்கு நம் ஸாஸ்த் தரத்தை போதித்துள்ளார். தர்மபத்னீ: ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மங்கார், குமாரத்திகள் இருவர்.

வாசகர் கடிதங்கள்

சென்ற இதழில் வெளியிடப்பட்ட ஸ்ராவணோபாகர்மா குலஸ்வாமிகளுக்கு மஹோபகாரமானது. மிகவும் சிந்தனையுடன், சிறப்பாக அதி விமர்சையாக விளக்கி ஸாமான்யருக்கும் புரியும்படி வெளியிட்டிருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி. வெளியிட்ட ஆசிரியர் குழுவினர்க்கு பகவதனு க்ரஹத்துடன் ஆசிகளும் உரித்தாகுக.

ஸ்ரீ உ.வே.பு.தி. கிருஷ்ணஸ்வாமி பட்டாச்சாரியார், புதுவாயல்.

சென்ற இதழில் வெளியிடப்பெற்ற ஸ்ராவணோபாகர்மா நம் குலஸ்வாமிகள் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தங்கள் சீரிய தொண்டு மேலும் வளர எம்பெருமான் க்ருபை என்றும் உண்டு.

ஸ்ரீ V. ஸ்ரீராம பட்டாச்சார், பாண்டமங்கலம், நாமக்கல்.

ப்ருஹஸ்பதி கிடைக்காத இடங்களில் தானாக தங்கள் வெளியீடு வாயிலாக ஸ்ராவணோபாகர்மா செய்ய உதவியுள்ள தங்கள் தொண்டுக்கு நன்றிகள் பல. மணமாலையும் மிக்க பயனுள்ளதாயுள்ளது. ஆந்திரத்திலும், நமது இதழ் போன்ற பத்திரிகை தெலுங்கில் வெளிவரக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ S. கோவிந்தராஜ பட்டாச்சார், ஒப்பிலியப்பன் கோவில்.

சென்ற 5, 6 வருடங்களுக்கும் மேலாக, திருப்பதியில் இருந்து ''ஸ்ரீவைகானஸ ப்ரபா'' எனும் தெலுங்கு ஸ்ரீவைகானஸ மாத இதழ் மஹோன்னதமாக மிகவும் சிறப்பாக வெளிவந்துகொண்டிருக்கிறது. இதற்கு தனி இதழ் ரூ.6/- வருஷ சந்தா ரூ.70/-, போஷகர் ரூ.1116/-, ராஜபோஷகர் ரூ.2500/-, மஹாராஜ போஷகர் ரூ.5000/- என சந்தா நிர்ணயித்துள்ளார்கள். பல குலஸ்வாமிகள் ஆந்த்ர தேஶத்தில் இதன் சந்தாதாரராகவும் மஹாராஜபோஷகர்களாகவும் ஆகி இதழைச் சிறப்பித்துள்ளார்கள். முகவரி: ஸ்ரீவைகானஸப்ரப, S.V.D.S.V. ஸபா கார்யாலயம், Ring Road, Thirumala, Tirupati, A.P. 517504. Phone: 08574-77282.

வடமொழி அகராதி

அஹித - வைக்கப்படாத, விரோதமான, உசிதமில்லாத

அஹிபு'ஜ் - கருடன், மயில், கீரிப்பிள்ளை இனத்தைச் சேர்ந்த நீண்டமுகமுள்ள பிராணி.

அஹிம்ஸா - தீங்கிழைக்காத இருக்கும் தன்மை

அஹேது - காரணமில்லாத தன்னிச்சையான

அஹேதுக - ஆதாரமற்ற, காரணமில்லாத தன்நலம் கருதாத

அஹோ - வியப்பு, ஆச்சரியம், துக்கம், புகழ்தல், அழைத்தல், அனுபவித்தல்

அக்ஷ: - அச்சு, இருசுகட்டை (வண்டியின்) பூமியின் அக்ஷரேகை சொக்கட்டான் ஆடும் காய் பத்மாக்ஷம் (தாமரைமணி) அறிவு, ஆன்மா, பிறவிக் குருடன்.

அக்ஷம் - இந்த்ரியம், கடல் உப்பு, துத்தம்.

அக்ஷத: - சிவன், தூற்றப்பட்ட உலர்த்தப்பட்ட அரிசி.

அக்ஷதா: - அக்ஷதை (பூஜை முதலிய கார்யங்களில் உபயோகிக்கப் படும் முனை முறியாத கழுவப்பட்ட அரிசிகள்)

அக்ஷய - அழிவில்லாத (குறைவில்லாத)

அக்ஷய: - பரமாத்மா, விஷ்ணு, (அறுபது ஆண்டுகளில்) கடை ஆண்டின் பெயர்.

அக்ஷர: - விஷ்ணு

அக்ஷரம் - எழுத்து, (பாஷைகளின்) சப்தம், பத்திரம், அழிவற்றது. ப்ரம்மம், ஜலம், ஆகாயம், பேரின்பம், மோக்ஷம்.

அக்ஷி - கண், எண் 2

ஆகாப:, ஆகம்பநம் - (பெ.ஆ. பெ.ப.) நடுக்கம், ஆட்டம் அடைதல், அசைதல்

ஆகர: - (பெ. ஆ) சுரங்கம், எந்த ஒரு வஸ்துவின் அதிகமாகக் கிடைக்கும் சாதனம் மிக உத்தமமான விஷயம்.

ஆகர்ணு - (வி.பர.) கேட்க

ஆகர்ஷ: - (பெ.ஆ.) இடித்து கொண்டு அப்பால் செல்லுதல். 2. வில்லை வளைத்தல், ஆகர்ஷித்தல், ஞானேந்திரியம், உரைகல் சூதாட்டம் சொக்கட்டான் ஆடுதல்.

ஆகர்ஷணம் - (பெ. ப) இழுத்தல், வசீகரித்தல். கடத்தி செல்லல்.

ஆகல் - (வி.பர.) பிடிக்க: எடுக்க, கட்ட, எண்ண, அளக்க, விரும்ப, ஆராய்ந்து பார்க்க அசைக்க எதிர்க்க.

ஆகலநம் - (பெ.ப.) பிடித்தல், கட்டுதல், அளத்தல், எண்ணிக்கை, விருப்பம், சிந்தித்தல், புரிந்துகொள்ளல்.

ஆகல்ப: - (பெ.ஆ.) அணிகலன், அலங்காரம், உடை, நோய்.

ஆகஸ்மிக - (உ.) எதிர்பாராத, திடீரென, ஆதாரமற்ற, காரணமில்லாத.

ஆகங்க்ஷா - (வி.பர) பிடிக்க.

ஆகாயஃ - (பெ.ஆ) சிதையின் (பிணத்தின்) மீது மூடப்படும் நெருப்பு.(சிதை)

ஆகார: - (பெ.ஆ) உருவம், அமைப்பு, முகத்தோற்றம், தோற்றம், முகத்தின் குறி, அடையாளம், குறி, குறிப்பு.

ஆகாலிக: - (உ) சிறிது நேரம் தோன்றி மறைகின்ற அற்பகாலத்திய, வேளை தப்பிய

ஆகாஶ:, ஆகாஶம் - (பெ.ஆ.பெ.ப.) வாயுமண்டலத்திற்கு மேலுள்ள பரந்த ஆகாயவெளி உலகு முழுவதும் வியாபித்துள்ள ஒளி ஒலி பரவச்செய்யும் கண்ணுக்குப் புலப்படாத திரவப் பொருள் ப்ரஹ்மம்.

ஆகீர்ண: - (இ.விஉ) சிதறுண்ட பரப்பப்பட்ட, நிரம்பிய மிக அதிகமான

ஆகுல: - (உ) சுமையேற்றப்பட்ட, நிரப்பப்பட்ட, அமுக்கப்பட்ட, குழம்பிய ஈடுபட்டுள்ள ஒழுங்கற்ற இயற்கைச் சூழ்நிலையிலில்லாத

ஆகுலித - (உ) துக்க மடைந்த. சிக்கிக் கொண்ட, தெளிவற்ற, பீடிக்கப்பட்ட

ஆகூதம் - (பெ.ப) அர்த்தம் நோக்கம் உபயோகம், எண்ணம், ஆச்சர்யம்.

ஆக்ருதி: - (பெ.பெண்.) உருவம். அமைப்பு உடல், தோற்றம், மாதிரி,

ஆகேகர - (உ) பாதி மூடிய (கண்கள்)

ஆக்ரந்த[3] - (பெ.ஆ) அழுகை, கூப்பிடுதல், அழைத்தல், சப்தம், நண்பன், காப்பவன்

ஆக்ரந்த[3]நம் - (பெ.ப) துக்கித்தல், பலத்த குரலில் கூப்பிடுதல்

ஆக்ரம் - (வி.உப) அருகில் செல்ல, ஆக்ரமிக்க பிடிக்க, எடுக்க, விஸ்தரிக்க

ஆக்ரம: - (பெ.ஆ) அருகில் செல்லல்

ஆக்ரமணம் - (பெ.ப) ஆக்ரமித்தல், பிடித்தல், அடைதல்.

ஆக்ராந்த - (இ. வ.உ) பிடிக்கப்பட்ட எடுத்து கொள்ளப்பட்ட, சுமை ஏற்றப்பட்ட, அடையப்பட்ட

ஆக்ரீட[3]ஃ - (பெ.ஆ) விளையாட்டு, மகிழ்ச்சி, மகிழ்ச்சிக்குரிய தோட்டம், விளையாடுவதற்கான தோட்டம்.

ஸங்கேத குறிகளின் விளக்கம்

அவ்யய:(அ) - வினைஎச்சம் (வி.எ)
ஆத்மனேபதம்(ஆ) - ஆத்மனேபதம் (ஆத்)
உபஸர் க[3]: - வேற்றுமை உருவு (வினைசொற்களுக்கும், கிருந்தச் சொற்களுக்கும் முதலில் வரும் இடைசொல்) (வே.உ.)
உப[4]யபதம் - உபயபதம் (பரஸ்மைபதம் ஆத்மனேபதம் ஆகிய இரண்டிலும் உபயோகமாகும் வினைசொல்) (உ.ப.)
க்ரியாபத[3]ம் - வினைச்சொல் (வி)
(ந)நபும்ஸகலிங்கம் - ஆணும் பெண்ணுமில்லாத (ப) பெயர் சொல்லையும் பலவின்பால் அஃறிணையும் குறிக்கும்.
நாமஶப்த[3]ம் - பெயர்ச்சொல் (பெ)
பரஸ்மைபத[3]ம் - பரஸ்மைபதம் (பர)
புல்லிங்க: - ஆண்பால் (ஆ)
பூதகால க்ருதந்த - இறந்தகாலவினை உரு (இவிஉ)
மத்யப்ரேக்ஷ: - விளிச்சொல் (கூ)
விஶேஷணம் - உரிச்சொல் (உ)
ஸர்வநாமஶப்த[3]ம் - ப்ரதி பெயர்ச்சொல் (பி)
ஸம்பாவ்யக்ருதந்த - நடக்கக்கூடிய வினை உரு (ந.வி.உ.)
ஸர்வஞ்சயபோ[3]த[4] ஸப்தம் - இணைச்சொல் (இ)

தொடரும்

தையற்கலை-5

செல்வி D. கல்யாணி, M.A., B.Ed., தையல் கலை ஆசிரியை, மேற்கு மாம்பலம்

உள்பாவாடை (நான்கு துண்டு)

மாதிரி அளவு



உயரம் = 36 + 1½ = 37½''

இடுப்பு சுற்றளவு 28 + 10/4 = 38/4 = 9½''

பாவாடையின் கீழ்ச் சுற்றளவு = 28 + 28 = 56 +8/4 = 16''

0 to 1 = உயரம் + 1½''

0 to 3 = இடுப்பு சுற்றளவில் நான்கில் ஒரு பாகம்

1 to 2 - இரண்டு இடுப்பு சுற்றளவில் +8/4

4 to 2

3 to 9 = ¾"

1 to 2

5 to 3 = பாவாடையின் கீழ் பாகம்.

அளவு எடுத்து வெட்டும் விதம்:

1. அளவு எடுக்கும்போது கரைபாகம் உயர வாட்டத்தில் இருக்கும் படியாக வைத்து அளவு எடுக்க வேண்டும்.
2. பாவாடையில் அளந்தால் பட்டியை விட்டு அளக்க வேண்டும்.
3. நேரடியாக அளந்தால் இடுப்பு சுற்றளவுடன் மேலே கூறியபடி (மாதிரி அளவில் கூறியபடி) அளந்து கொள்ளவும். பாவாடையில் அளந்தால் இடுப்பு சுற்றளவுடன் தையலுக்கு மட்டும் மேலும் கீழும் 4'' சேர்த்து நான்கால் வகுக்கவும்.
4. முதலில் உயரம் அளந்து மார்க் செய்யவும். (0 to 1 = 371/2") அகலம் எடுக்கும்போது இடுப்பு சுற்றளவு ஒரு பாகம் (9 ½'') பாவாடையின் கீழ் சுற்றளவு ஒரு பாகமும் (16'') கூட்ட வேண்டும். (0 to 5) அதாவது 9½ + 16 = 25'' அளவு கோடு போட்டு வெட்ட வேண்டும்.
5. 0 to 3 = 9½" மார்க் செய்யவும். கீழ்ப்பறம் 1 to 2 = 16" மார்க் செய்து கிராஸாக கோடு போடவும். இவ்வாறு செய்யும்போது மீதமுள்ள பாகத்தில் தானாகவே அடுத்த பீஸ் துண்டு கிடைக்கும். இதனால் துணியும் வேஸ்ட் ஆகாது.
6. இப்போது 4 to 2, 3 to 9 = ¾" மார்க் செய்யவும். 8 to 2; 3 to 7 = 4" மார்க் செய்து வளைவாக வரையவும்.
7. வெட்டும்போது முதலில் கிராஸ் கோடு வெட்டவும். பின்னர் மேல்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் வளைவுகளை வெட்டவும். இப்போது இரண்டு கிராஸ் துண்டுகள் கிடைக்கும்.
8. இதேபோன்று மீண்டும் மீதமுள்ள துணியில் மேலே சொன்னது போன்று அளந்து மேலும் இரண்டு துண்டுகள் வெட்டி எடுக்கவும்.

தைக்கும் விதம்

1. உயரவாட்டில் இரண்டு இரண்டு நேர் துண்டுகளையும் சேர்த்துத் தைக்கவும்.
2. மேல்புறத்தில் இரண்டு சைட் கிராஸிலும் 3'க்கு மெல்லியதாக உருட்டி தைக்கவும். மீதமுள்ள இரண்டு கிராஸ் பாகத்தையும் சேர்த்துத் தைக்கவும்.
3. இதேபோன்று மற்றொரு இரண்டு சைட் கிராஸ் துண்டுகளையும் சேர்த்துத் தைக்கவும்.
4. கீழ்பாகம் முதலில் ¼" மடித்து பின்னர் ½ க்கு மடித்து தைக்கவும்.
5. மேல்புறத்தில் பட்டி தைக்க வேண்டும். அதற்காக பாவாடையின் மேல்புறத்தில் அளந்து கொண்டும் அதனுடன் 1'' சேர்க்கவும். அகலம் 3½'' க்கு நீளமாக ஒரு பீஸ் எடுக்கவும்.
6. முதலில் பட்டி துணியை பாவாடையின் மேல் பாகத்தில் ½'' வெளியே விட்டு சேர்த்துத் தைக்கவும்.
7. பின்பு முடிக்கும்போதும் ½'' விடவும். இரண்டு புறமும் மடித்து ஒருதையல் போடவும்.
8. மேல் பாகத்தில் முதலில் ¼'' மடித்து பின்பு முன்னர் பாவாடையும் பட்டியும் சேர்த்து தைத்த தையல் மீதே இதனை மடித்து அதாவது பட்டியின் உயரம் 1¼'' க்கு இருக்கும்படியாக மடித்து தைக்கவும்.
9. நாடா கோர்த்து முடிக்கவும்.

தொடரும்

கேள்வி - பதில்

ஸ்ரீலக்ஷ்மீநாராயண பட்டாச்சார், திருமருகல்

கே: சென்ற ஆடிமாத இதழில், மாதப்பிறப்பன்று தர்ப்பணம் காலையிலும், மாலையிலும் செய்யவேணும் என எழுதியிருந்தீர்கள். சான்றும் கொடுத்திருந்தீர்கள். ஒரு நாளைக்கு ஒருமுறைதான் தர்ப்பணம். நைமித்திகம் மட்டும்தான் செய்ய வேணுமென்று எனது ஆசார்யன் சொல்லியுள்ளார். இதில் எது சரி? அன்று சூன்ய திதியாயினும் பித்ருக்களை ஆராதிக்கலாமா?

ப: சூன்ய திதியானால் ச்ராத்தம் செய்யக்கூடாதே தவிர தர்ப்பணங்கள் நேர்ந்தால் ண்டு. தக்ஷிணாயன புண்ணியகாலம், சந்த்ர க்ரஹண புண்ய காலம் இரண்டுமே நைமித்திகம் என்றும் ஆகவே இரண்டு புண்யகாலங்களும் தனித்தனியாக நேர்ந்ததாலே இரண்டு காலத்திலும் தர்ப்பணாதிகளை செய்ய வேண்டும் என்றும் ப்ரமாணத்துடன் இங்கு உள்ள ப்ருஹஸ்பதிகள் அபிப்ராயப்பட்டு நமக்கு விளக்கினர். அவ்விஷயங்களையே வெளியிட்டோம். ஆனாலும் அவரவர் இல்ல ப்ருஹஸ்பதிகளின் அபிப்ராயப்படி அநுஷ்டிப்பதும் சரியே.

குருர்பிரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ ஜநார்தனஃ।
குருஸ்ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நமஃ॥

என்றபடி ப்ரத்யக்ஷ தைவமாக விளங்கும் ப்ருஹஸ்பதிகளின் கூற்றுப்படியே அனுஷ்டிக்க வேண்டியது.

ஸ்ரீ உ.வே. N.S. பார்த்தசாரதி பட்டாச்சாரியார்,
ஆசிரியர், ''ஸ்ரீவைகாநஸம்''

வாசகர் கடிதம்

நம் பத்ரிகையில் அரிய விஷயங்கள் பெருகி வருகின்றன. படிக்க மிகவும் ஆனந்தகரமாய் இருக்கின்றது. என்றும் உம் பணி சிறக்க ஸ்ரீ விகநஸா சார்யர் அருளவேணும்.

புலவர் ஸ்ரீ உ.வே. நா. வேங்கடவரதபட்டாச்சார், மருதாடு.

நம் ''ஸ்ரீவைகானஸத்தில்'' வெளியாகும் அனைத்து பகுதிகளும் மிகவும் பயனுள்ளதாகவும், தெரியாத பல விஷயங்களை தெரிந்து கொள்ள ஹேதுவாகவும் உள்ளது. திவ்ய தேசகட்டுரை, மருத்துவ கட்டுரை, சிறுவர்பகுதி, தையற்கலை ஆகியன மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. குறள்மொழிகள் அருமை, இதுவரை இல்லாபுதுமை.

ஸ்ரீமதி. ராஜலக்ஷ்மி வெங்கடராமன், பள்ளத்தூர், சிவகங்கை.

செய்திகள்

ஆஹுதி - 15

இடம்: சேலம், ஸ்ரீமோஹன் - மாலா தம்பதிகள் திருமணத்தில்
நாள்: 1.4.2000

ஸ்ரீ வைகானஸ ஞான தீபம் ஸ்ரீ.உ.வே. Dr. S.V. சந்தான பட்டாச்சார் தலைமையில் சங்கேந்தி S. சுதர்சனம் M.A. ஸ்ரீவில்லிபுத்தூர் அலங்காரம் ராஜகோபால பட்டாச்சார் உரையாற்றினார்கள். S. சுதர்ஸன பட்டர் நன்றியுரை உபயம் ஸ்ரீராம்பட்டர். இணைப்புரை. பிரசாரகர் S. ரகுவீர பட்டாச்சாரியார்.

ஆஹுதி - 16

16.4.2000 அம்பல் - ஸ்ரீ வீற்றிருந்த பெருமாள் ஸந்நதி ஸம்ப்ரோக்ஷணம்
பகல்: 1.00 முதல் 3.00

சீர்காழி ஸ்ரீ உ.வே. S. சேஷாத்திரி பட்டாச்சார் தலைமை கலந்து கொண்டோர் வாணாதிராஜபுரம் ராகவபட்டர், நிரவி ரங்கனாத பட்டர், தஞ்சை வரதராஜ பட்டர், கருப்பூர் லட்சுமண பட்டர், நாமக்கல் விஜயராகவ பட்டர், நெய்வேலி ராஜன்பட்டர், உப்பிலியப்பன் கிருஷ்ணபட்டாச்சார், திருவல்லிக்கேணி கோவிந்தராஜ பட்டர், N.S. பார்த்தசாரதி பட்டர் (நம் இதழ் ஆசிரியர்), ஸ்ரீ ரங்கம் ராகவ பட்டர் - நன்றியுரை - A.V. ஸௌரிராஜபட்டாச்சார், ஸ்ரீனிவாஸன் B.E. இணைப்புரை - பிரசாரகர் S. ரகுவீரபட்டாச்சார், மதுராந்தகம்.

ஆஹுதி - 17

1.5.2000 தலைமை C.K. ஸ்ரீனிவாச பட்டாச்சாரியர். (சிந்தாதரிப் பேட்டை 26, அக்ரகாரம்) கலந்து கொண்டோர் சி.எஸ். பிரபாகரன் B.Sc. இன்னிசை அர்ச்சனை பற்றி ராம கிருஷ்ணபட்டர், வைகானஸ நாட்டுப் பாடல் திருமதி சாந்தாராமகிருஷ்ணன், கேசவனும் ஆழ்வாரும் CR ஸ்ரீதர் B.Com. P.V. அனந்தகிருஷ்ண பட்டர். இணைப்புரை SVDSV பிரசாரகர் S. ரகுவீர பட்டாச்சார். N.S. பார்த்தசாரதி பட்டர், (ஸ்ரீ வைகானஸம் ஆசிரியர்) நன்றியுரை - C.S. பத்மநாபன் உபயம் ஸ்ரீராமகிருஷ்ண பட்டர்.

ஆஹுதி - 18

சென்ற 25.5.2000 அன்று செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங் குளத்தூரில் ஸ்ரீ உ.வே. கவி. (கா.சு.) S. ராஜகோபால பட்டாச்சார்

க்ருஹத்தில் ஸ்ரீவைகாநஸ ஞான வேள்வி ஆஹூதி 18 சிறப்பாக நடைபெற்றது. AKS Trust - இன் ''ஸ்ரீவைகாநஸம்'' இதழ் சார்பில் ஸ்ரீப்ருகு மஹர்ஷி திருநக்ஷத்ர வைபவமும் கொண்டாடப் பெற்றது. தலைமை: ஸ்ரீ உ.வே. N.G. ராமஸ்வாமி பட்டாச்சார், திருவல்லிக்கேணி. ஸ்ரீ.உ.வே. N. பார்த்தஸாரதி பட்டாச்சார், திருவல்லிக்கேணி, ஸ்ரீ.உ.வே. கோபால கிருஷ்ண பட்டாச்சார், சிங்கப்பெருமாள் கோயில் ஸ்ரீ உ.வே. K. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார், புலிவலம் ஸ்ரீ உ.வே. N.S. பார்த்தசாரதி பட்டாச்சார், திருவல்லிக்கேணி (ஆசிரியர், ''ஸ்ரீவைகாநஸம்'') ஸ்ரீ உ.வே. R. ஸுஷாத்ரி பட்டாச்சார், காட்டாங்கொளத்தூர் ஸ்ரீ.உ.வே. N.G. லக்ஷ்மீநரஸிம்ஹ பட்டாச்சார், திருவ்லிக்கேணி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் நடைபெற்ற கவியரங்கத்திலும் உபயதாரரான கவி.கா.சு. ராஜகோபால பட்டாச்சார், JASSONS ஸ்ரீ.உ.வே. S. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார், திருவான்மியூர், ஸ்ரீ.உ.வே. N.R. வாஸுதேவ பட்டாச்சார், திருவல்லிக்கேணி, ஸ்ரீமதி ஜெயஸ்ரீ ஸ்ரீநிவாஸன், திருவல்லிக்கேணி, திருமால்கவிச் செல்வர் ஸ்ரீ உ.வே. s. ரகுவீர பட்டாச்சார், மதுராந்தகம் ஆகியோர் கவிதைகளை கவினுற வழங்கி சபையை அலங்கரித்தனர். மதுராந்தகம் ஸ்ரீ.உ.வே. S. ரகுவீர பட்டாச்சார் இணைப்புரை வழங்கியதும், கவி.கா.சு. ராஜகோபால பட்டாச்சார் நன்றியுரை வழங்கினார். ஸதஸ் சுபமாக நிறைவுற்றது.

ஆஹுதி - 19

இடம்: ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஸந்நிதி, தஞ்சாவூர்.

நாள்: 10.6.2000 இரவு 10.30 மணி

சம்புரோக்ஷண அங்குரார்ப்பண நாள் - தலைமை S. ரகுவீர பட்டாச்சார் - வரவேற்பு - வேணுகோபால கிருஷ்ண பட்டர் கருத்தரங்கில் Dr. முத்து பட்டர், S. சுதர்ஸன பட்டர் M.A., புனல்வாசல் ஸ்ரீநிவாஸன், வரதராஜபட்டர், நன்றியுரை & உபயம் பாலகிருஷ்ண பட்டர் & சுதர்ஸந பட்டர்.

ஆஹுதி - 20

11.6.2000 அன்று ஒப்பிலியப்பன் கோயில் பொன்னப்பட்டாச்சாரியர் அரங்கில் பிற்பகல் 2.00 to 3.00 வரை PV. கிருஷ்ண பட்டாச்சாரியர் தலைமை - வரவேற்பு கோவிந்தபட்டர் கருத்தரங்கில் R. ராகவபட்டர், P. S. சக்ரவர்த்தி பட்டர், K. ஸ்ரீனிவாஸபட்டர், திருமங்கைச்சேரி வெங்கடராம பட்டர், நாதன் கோவில் V. ஸ்ரீனிவாச பட்டர், நன்றியுரை - C. ஸ்ரீதர்பட்டர், இணைப்புரை S. ரகுவீர பட்டாச்சார். ஸந்நிதி நிர்பந்தத்திலும் பெரும்பாலான அர்ச்சகர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆஹுதி - 21

12.6.2000 சூணாம்பேடு, ஸந்நிதி, ஸ்ரீரங்கசாமி பட்டாச்சாரியார் - ஜேஷ்டகுமாரர் கோவிந்தராஜனுடைய பௌத்திரன் சிர.கிரிதரனின் உபநயனத்தில் - தலைமை ஸ்ரீ உ.வே. கேசவ பட்டர், சிறப்புரை பொன்னேரி கோபாலகிருஷ்ண பட்டர், காலடிபேட்டை ராமகிருஷ்ண பட்டர், ரகுவீர பட்டர், வரவேற்புரை - குருபட்டர், நன்றியுரை, சந்தான பட்டர், சூணாம்பேடு. பெண்கள் 20 பேர் ஆடவர் 30 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

ஆஹ்ூதி - 22

சௌ. சௌம்யா, சிர. ஸ்ரீனிவாஸன் திருமணம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமம் - உப்பிலியப்பன் கோயில் - 7.7.2000 - நேரம் மாலை 3.00 to 4.30 தலைமை. ராகவ பட்டாச்சார் வாணாதிராஜபுரம், கருத்தரங்கில் பேசியவர்கள் 1 N.G. ஸ்ரீநிவாஸ பட்டாச்சார், திருவல்லிக்கேணி, K.M. சுந்தரவரதன் M.A., கடுக்கலூர், R. ஸ்ரீதர பட்டாச்சார், மாடம்பாக்கம், V. ஸ்ரீனிவாஸ பட்டர், திருநெல்வேலி, அல்லூர் சகுந்தலா, அல்லூர் ஸ்ரீமதி வெங்கடராம பட்டாச்சாரியர். நன்றியுரை & உபயம் P.V. கிருஷ்ண பட்டாச்சாரியர். இணைப்புரை S. ரகுவீர பட்டாச்சார், SVDSV சபா சார்பு, கலந்துகொண்டோர் 35 பேர்.

ஆஹ்ூதி - 23

8.7.2000 மாலை 2.30 to 4.30, 13, LIC காலனி, திருவான்மியூர். தலைமை N.S. பார்த்தசாரதி பட்டாச்சாரியர் (ஆசிரியர், ''ஸ்ரீ வைகானஸம்''), கலந்துரையாடலில் பங்குபெற்றோர் s. ரகுவீர பட்டாச்சாரியர், D. மோகன் பட்டாச்சாரியர், வரதராஜ பட்டாச்சாரியர், s. சந்தானகோபால பட்டாச்சார், R. ராதாகிருஷ்ண பட்டாச்சார் முதலியோர் நன்றியுரை & உபயம் N.A. வரதராஜ பட்டாச்சாரியர்.

ஆஹ்ூதி - 24

18.7.2000 அன்று 4 மணி (p.m.) கெங்கவரம் ஸ்ரீ ஆசார்ய தினத்தில் (திருமஞ்சனம் சேவை சாற்றுமுறை, ததியாராதனம் உற்சவம் இடையில்) 200 பேருக்கு மேல் குடும்பமாக கண்கொள்ளாக் காட்சி - ஸ்ரீ பார்த்தசாரதி பட்டர் தலைமையில் ஆரணி கேசவ பட்டர், கோபால பட்டர், வந்தவாசி ரங்கநாயகியம்மாள், கலசபாக்கம் வெங்கடேச பட்டர், இளைஞர்கள் பாலாஜி, S. வெங்கடராகவன், K. முரளி, R. சம்பத்குமார், கருத்தரங்கில் பங்கேற்றனர். S. ரகுவீர பட்டாச்சார் இணைப்புரை வழங்கினார். 40 ஆண்களும் 35 பெண்களும் சிறுவர் சிறுமியரும் கலந்துகொண்டனர்.

ஆஹ்ூதி - 25

மதுரையில் வெங்கடசாமி அக்ரஹாரத்தில் 20.7.2000 ஸ்ரீ உ.வே. ராமன் பட்டாச்சார் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் - 11 a.m. தலைமை. ஸ்ரீ உ.வே. கோவிந்தராஜ பட்டாச்சார், திருக்குறுங்குடி வெங்கடரமண பட்டாச்சார், ஸ்ரீவில்லிபுத்தூர் அனந்தநாராயண பட்டாச்சார், ஸ்ரீராம பட்டாச்சார், அழகிய பாண்டிபுரம், மதுரையைச் சேர்ந்த முத்து பட்டர், செல்லப்பா பட்டர், ராஜாமணி பட்டர், சுந்தரநாராயண பட்டர் உரையாற்றினர். ஸ்ரீரகுவீர பட்டர் இணைப்புரை வழங்கினர். பாளையங்கோட்டை மழலைச் செல்வன் S. கௌசிக்ராமன் (வயது 4) ஸ்ரீ ஆசார்ய ஸ்தோத்ரம் ஒரு பாடல் கூறி அனைவரது ஆசிர்வாதத்தையும் பெற்றான். விரைவில் ஒரு பயிற்சி வகுப்பு நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

90 பேர் கலந்துகொண்டனர்.

பி.கு. கெங்கவரத்தில் ஒருநாள் முழுதும் நமது ஸ்ரீவைகாநஸ குடும்பத்தினர் 200 க்கும் மேல் விழாவில் கலந்து கொண்டது கண்கொள்ளாக் காட்சி.

த்வாதஶ மாஸார்ச்சனம்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர், ''ஸ்ரீவைகானஸம்''

ஶ்ராவணமாஸார்ச்சனம்

பௌர்ணமியன்று ஶ்ரவண நக்ஷத்ரம் சேர்வதால் ஶ்ராவணம் என்று பெயர் பெற்ற இவ் ஆவணி மாதத்தில் எம்பெருமானுக்கு நித்யம் நெய், தயிர் திருக்கண்டருளப் பண்ணினால் வருஷ முழுதும் நிவேதனம் செய்த பலன் உண்டாகும் என ஸ்ரீமரீசி மஹர்ஷி அருளியுள்ளார். அத்ரி மஹர்ஷியும் ஶ்ராவண ஶ்ரவணத்தில் (இம்மாதத்தில் ஶ்ரவணத்தன்று) எம்பெருமானுக்கு விஶேஷ திருமஞ்ஜனம், உத்ஸவங்களை செய்விப்பதை மிகவும் சிலாகித்துள்ளார். தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 28 வது சதுர்யுகத்தில் எம்பெருமான் எடுத்த விஶேஷமான அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரம் உண்டானதும் இந்த ஶ்ராவண மாதத்தில்தான். ஶ்ராவண பகுளாஷ்டமியன்று ஸ்ரீஜயந்தியைக் கொண்டாடுவதை மிகவும் விரிவாகவும் சிறப்பாகவும் மஹர்ஷிகள் அருளியுள்ளனர். இந்த ஸ்ரீஜயந்தி மஹோத்ஸவத்தை செய்விப்பவருடைய ஏழேழு ஜன்ம பாபங்கள் எல்லாம் நசித்து அவர் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகிறார் என ஸ்ரீப்ருகு மஹர்ஷி அருளியுள்ளார்.

ஸ்ரீப்ருகு மஹர்ஷி, வாஸாதிகாரத்தில், 22 வது அத்யாயத்தில், ஸ்ரீஜயந்தி பற்றி அருளியுள்ளதை காண்போம். ஸிம்ஹ மாஸத்தில் (ஸிம்ஹ ராசியில் ஸூர்யன் உள்ளபோது) க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியன்று ரோஹிணி நக்ஷத்ரம் இருந்தாலும், இல்லாமலிருந்தாலும், ஸ்ரீஜயந்தியை கொண்டாட வேண்டும். ரோஹிணி அஷ்டமியுடன் சேர்ந்திருப்பது மிகவும் விசேஷமாக ஸ்ரீகாஶ்யபாதிகளால் உரைக்கப்படுகிறது.

அஷ்டமியன்று அர்த்தராத்ரிக்கு முன்பாகவோ, பின்பாகவோ அஷ்டமி திதி ஒரு கலையாவது உள்ளதாயின், ரோஹிணியுடன் கூடியதாய் ஸர்வபாப ப்ரணாஶநீயாகவும் திகழ்கிறது. இந்த ஜன்மாஷ்டமியன்று, லீலாயஷ்டிதரனாகவும், வேணுவை (புல்லாங்குழல்) திருவாயில் வைத்துள்ள வேணுகோபாலனாகவும், நாட்யமாடுபவனாகவும், காளீய நர்தனனாகவும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீக்ருஷ்ணனை ப்ரதானமாக பூஜிக்க வேண்டும். இந்த நர்தன க்ருஷ்ணர் திவ்யமங்கள விக்ரஹ மூர்த்தி ஆலயத்தில் இல்லாவிட்டால், அந்த ஆலய (சதுர்புஜமுள்ள) உத்ஸவ மூர்த்திக்கு ஸ்ரீஜயந்தி உத்ஸவம் செய்விக்க வேண்டும் என ஸ்ரீப்ருகு மஹர்ஷி விதித்துள்ளார்.

ஸ்ரீஜயந்தியன்று ஸ்ரீக்ருஷ்ணனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பசும்பாலை அருந்தும் (குழந்தையில்லாத) ஸுமங்கலிகள் புத்ரப் பேற்றை அடைகின்றனர் என ஸ்ரீமரீசி மஹர்ஷி அனுக்ரஹித்துள்ளார்.

மறுநாள் காலை நடைபெறும் எம்பெருமானுடைய உத்ஸவத்தில், ஸ்ரீக்ருஷ்ணனுக்கு 'ஸிநீவாலி' மந்த்ரத்தால் திருவடிகளில் மஞ்சள் பொடியை ஸமர்ப்பிக்கவேணும். 'அதோ தேவா' மந்த்ரத்தாலே தைலத்தை பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க வேணும். உத்ஸவத்தில் விப்ராள் முதலான பக்த ஜனங்களுக்கு தைலத்தையும், மஞ்சள் பொடியையும் கொடுக்க வேணும்.

வாஸாதிகாரத்தில், மேலும் ஸ்ரீப்ருகு மஹர்ஷியும் இவ்விதமாக ஸ்ரீஜயந்தி உத்ஸவம் செய்விப்பவன் இஹலோகத்தில் பரமஸுகானுபாவ்யனாக இருந்து இறுதியில் ஸ்ரீவைகுண்டத்தில் ஸாயுஜ்ய பதவியை அடைகிறான என்றருளியுள்ளார்.

இப்பேற்பட்ட மஹிமை வாய்ந்த ஸ்ரீஜயந்தி கண்ணன் உத்ஸவத்தை நாமும் செய்வித்து ஸேவித்து அனைவருக்கும் மங்களப்ரதமாகக் கடவது. மங்களாநி பவந்து''

श्रवण द्वादशीविशेष:

ஆவணி மாதத்தில் ஸ்ரவண நக்ஷத்ரம் த்வாதஸியன்று ப்ரதிவருஷம் சேரும். இந்த ஸ்ரவண த்வாதசியில் பகவானுக்கு விஸேஷமாக உத்ஸவம், தளிகைகள் கண்டருளப்பண்ணி வருஷ முழுதும் செய்த பலனை அடையலாம் என ஸ்ரீஅத்ரி மஹர்ஷி ஸமூர்த்தார்ச்சனாதி கரணத்தில் அருளியுள்ளார். ஸ்ரீப்ருகு மஹர்ஷி, க்ரியாதிகாரத்தில், ''அந்த வருட முழுதும் கேஸவனான எம்பெருமானுக்கு செய்த ஆராதனத்தில் எவையேனும் தோஷங்கள் இருந்தால், அவற்றின் ஸாந்திக்காகவும், ராஜராஷ்ட்ர நலனுக்காகவும், ஸர்வருக்கும் மங்களம் உண்டாவதற்காகவும், ப்ரஹ்மனால் சொல்லப்பட்டபடி பவித்ரோத்ஸவத்தை இந்த ஸ்ரவண த்வாதஸியில் செய்ய வேண்டும்'' என்று அருளியுள்ளார்.

ஸ்ரீ வைகானஸ குறள் மொழிகள்

வந்தவர்க்கும் வருபவர்க்கும் வற்றாத வரவேற்பைத்
தந்திடுக அர்ச்சகனே நீ!
தத்தவர்க்கும் தராதோர்க்கும் தாமரையான் - ஸந்நிதியில்
எந்தவித வேறுபாடும் இல்.
பனிரெண்டு திருமண் பதுமமணி பக்தியிவை
கொண்டவனே வைகானஸன்.
விஷ்ணுபலி சடங்குடன் உதிக்கின்ற நற்செல்வ!
விகனஸரே, உன் தெய்வமாம்.
உத்தானம் உனக்கேதான் உரைத்திட்ட விகனஸர்க்கு
எத்தாலும் கைமாறிலை.
அர்ச்சைமுறை கொண்டே அவ்வுலகம் அடைந்திடலாம்
அர்ச்சகனே அற்புதன் நீ!
தினந்தோறும் பூசை செய்திட்டாலே போதும்
உனக்கங்கே உண்டு வீடு.
ப்ருக்வத்ரிகாஸ்யப மரீசியென நால்வரே
விகனஸரின் சீடர்கள் காண்.
கர்ப்பாஷ்ட மந்தன்னில் பூணூலனியா தான்
கண்ணிருந்தும் காணாதவன்.
பிறப்பதற்கு முன்னேயே பிறந்திடுமே - வைணவமே
பிறப்பாலே உயர்ந்திட்டாய் நீ!

ஸ்ரீ S. ரகுவீரபட்டாச்சார், மதுராந்தகம் பிரசாகர் SVDSV ஸபா

RDIS No.779/99 SRI VAIKANASAM REGD. No. TN/Chief-PMG-123/2000

விக்ஞாபனம்

ஸ்ரீவைகாநஸ அர்ச்சகர்களிடமிருந்தும் அசேஷகுல ஸ்வாமி களிட மிருந்தும் கீழ்க்காணும் தலைப்புகளில் கட்டுரைகள்/கருத்துக்கள்/கேள்விகள் வரவேற்கிறோம். கட்டுரைகள் அனுப்புவோர் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இணைத்தால் ப்ரசுரிக்க ஆவன செய்யப்படும்.

1. ஸமூஹ முன்னேற்றம் குறித்த கட்டுரைகள்
2. ப்ரதிஷ்டை, உத்ஸவம் முதலானவை ஸம்பந்தமான கட்டுரைகள்
3. வித்வான்களுடைய கட்டுரைகள் மற்றும் தொடர் கட்டுரைகள்
4. ஸ்ரீமத் விகநஸாசாரியன் உத்ஸவ விவரங்கள்
5. மணமாலை விளம்பரங்கள்
6. வாசகர் கடிதங்கள்
7. வாசகர் கேள்விகளுக்கான வித்வான்களின் பதில்கள்
8. சங்கச் செய்திகள்
9. திருமணப் பத்திரிகை அனுப்புவோருக்கு மணவாழ்த்துக்கள்
10. கோவில் உத்ஸவ பத்ரிகைகள் / விவரம் அனுப்பினால், ''உத்ஸவாதி விவரங்கள்'' பகுதியில் ப்ரசுரிக்கப்படும்.

Sri: ☎ 8442180

THANJAI MOORTHY

16, NORTH TANK SQUARE STREET,
TRIPLICANE, CHENNAI - 5.

எங்களிடம் 108 திவ்யதேசப்பெருமாள் படம், பெருமாள் படம் போட்ட மேக்னட், கீசெயின், பெருமாள் டாலர்கள், யந்த்ரங்கள், நவரத்ன மாலை, துளஸி மாலை, ஸ்படிக மாலை, நல்முத்துமாலை, திருமண் ஸ்டிக்கர், திருமண் பெட்டி, லேமினேஷன் செய்தபெருமாள் படங்கள் முதலானவை சகாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

Edited by N.S. Parthasarathy Battachariar & D. Mohan Battachariar. *Printed at:* Guru Achagam, Triplicane,Chennai-600 005. *Published by:* A K S Trust, 24, Ellaiamman Koil Street, West Mambalam, Chennai - 600 033. Legal jurisdictions chennai city courts only.